புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம்ஸ்ரீ ஆகஸ்டுமீ 1உ [ந. 106

# தேசிய யுத்த முன்னணி.

## அராஜகமா, வெற்றியா?

### விபத்தின் மத்தியிலா விளையாட்டு.

I

### சட்ட மறுப்பு இயக்கத்தினல் விளையும் தீங்கு.

(தேசிய யுத்த முன்னணியின் மத்திய ஸ்தாபனம், புதிய டெல்லி, ஜுலை 21.)

தேசிய யுத்த முன்னணி என்பது அரசாங்க விஷயத்தில் ஈடுபடும் ஸ்தாபன மில்லை. ஆகவே அரசாங்கத்தாருக்கும், பொதுமக்களுக்கும் இடையிலுள்ள சச்சரவுகளைப்பற்றி அதிக அக்கரை எடுத்துக்கொள்ளாது. யார் என்ன பேசினலும், எழுதினலும், என்ன செய்தாலும் எதிரிக்கு உதவுகிறதா, இந்தியா வின் ஆபத்தை அதிகரிக்கிறதா? என்று மாத்திரம் கவனிக்கும்.

இந்தக் கேள்விகளைச் சமீபத்தில் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப்பற்றி கேட்டால் விபரீதமான முடிவு ஏற்படுகிறது.

காங்கிரஸ் தீர்மானத்தின் சரித்திரம், அரசியல் முதலிய சம்பந்தங்களை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனல்,

1. நமது சிப்பாய்களின் நிலைமை;
2. நமது நேசநாடுகள்;
3. இந்தியா;

இவைகளில் எவ்வித மாறுதலைச் செய்யுமென்று மாத்திரம் கவனிப்போம்.

ஒவ்வொரு வகையிலும் அக்கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில் விபரீதமானது தான்.

1. **நமது சிப்பாய்கள்.**—காங்கிரஸ் திட்டப்படி தற்போதுள்ள ஸர்க்கார் உடனே வாபஸ் வாங்கவேண்டும். இடைகாலத்தில் இந்தியாவில் அரசாங்கமே இல்லை. ஆகவே சைனியமும் இருக்க முடியாது என்பது.

இந்த நிலைமையைப்பற்றி 1942 ஜூன் 14வ ஹரிஜன் பத்திரிகையில் மிஸ்ட்டர் காந்தி எழுதியுள்ளார் "இதன் பிரகாரம் பிரிடிஷ் ஸர்க்கார் வாபஸ் வாங்கியதிலிருந்து இந்தியச் சைனியம் கலைக்கப்படும்."

முன்பைக்காட்டிலும் தற்போது இந்தியப் பாதுகாப்பு அத்யாவசியமாக இருப்பதால் சைனியத்தைக் கலைக்கவேண்டுமென்று சொல்லப்படும் தீர்மானத்தைப்பற்றி அதிக வியாக்யானமே தேவையில்லை. நமது இந்தியப் படைகள் செய்துள்ள தீரச் செயல்களுக்கு இது தகுந்த வெகுமதியாகாது.

ஒருக்கால் காங்கிரஸ் கமிட்டி தனது நோக்கத்தைத் திருத்திக்கொண்டு சைனியம் நீடித்திருக்கலாமென்று அபிப்பிராயப்பட்டாலும் இதுவரை பெற்று வரும் ஸப்ளைகளை இனி பெற்று சண்டையில் ஈடுபட முடியாது. ஏனெனுல் ஸப்ளைகளைச் செய்ய அரசாங்கம்தான் இல்லையே. ஆகவே இந்தியச் சைனியத்திற்குப் பின்புறம் ஒரு குத்துக் குத்திய மாதிரிதான். சைனியத்தின் செயல்களை நிந்தித்த மாதிரி ஆகிறது.

சைனுவிற்கும் உதவியில்லை.

2. **நமது நேசநாடுகள்.**—கடந்த ஐந்து வருஷ காலமாக சைனுவை தீரச் சண்டைகளில் இந்தியா உத்ஸாகப்படுத்தி வந்திருக்கிறது. சைனுவின் உதவிக்குப் போகவில்லையென்று பிரிடனைப்பற்றி காங்கிரஸ் தலைவர்கள் குறைகூறியுமிருக்கிருர்கள். கடைசியாக இந்தியாவில் எல்லா முஸ்தீப்புகளுடனும் ஒரு பெரிய சைனியம் தயாராகி இருக்கிறது. இது ஜப்பானை எதிர்த்துப்போராட லாயக்காகவும் இருக்கிறது. அப்படி சண்டை செய்தால் சைனுவிற்கு நிச்சயம் உதவலாம்.

காங்கிரஸ் தீர்மானத்தைப் பார்த்தால் சைனுவிற்கு ஏற்படும் உதவியை காங்கிரஸ் கமிட்டி வேண்டாமென்ற மாதிரி ஆகிறது.

3. **இந்தியா.**—காங்கிரஸ் தீர்மானத்தைச் சரியாக அர்த்தப்படுத்திக் கொண்டால் இந்தியாவிற்குள்ள ஆபத்துத்தான் அதிகரிக்கிறது.

தாக்கப்போகும் நாடுகளில் ஏற்படும் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் அச்சு நாடுகள் கைதேர்ந்தவை. இந்தக் காங்கிரஸ் தீர்மானத்தை ஜப்பானியர் அசதி மறதியாக விட்டுவிடமாட்டார்கள். மாரி காலம் வரவர தாக்குதல் பயமும் இருக்கிறதால் அதோடு சட்ட மறுப்பு இயக்கமும் ஏற்படுவது திருப்திகரமான விஷயமில்லை.

ஜப்பானியரின் முன்பாக நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதை காங்கிரஸுக்குத் திருப்தியாக இருக்கலாம். ஆனுல் பொதுஜனங்கள் அதை விரும்பவில்லை.

காங்கிரஸ் தீர்மானப்படி இந்தியத் துருப்புகளுக்கும், நேசநாடுகளுக்கும், இந்தியாவிற்கும் ஆபத்துதான். ஆகவே தேசிய யுத்த முன்னணியில் சேருவோர் இவ்விஷயத்தை நன்கறிந்து பொதுமக்களைக் காங்கிரஸ் தீர்மானத்தில் அதிருப்தி கொள்ளும்படி செய்யவேண்டும்.

## II

## காங்கிரஸுக்கு பஹிரங்கமான எச்சரிக்கை.

(டெயிலி ஹெரால்டு, ஜூலை 21.)

இந்திய நேயர்களே, நீங்கள் எங்களைக் கைவிடுகிறீர்கள். பிரிடிஷ் தொழிலாளர் கக்ஷியினுல் கீழ்கடையில் அடைந்த கௌரவமான சிநேகத்தினுல் அடைந்த நன்மைகளைப் புறக்கணிக்கிறீர்கள். இந்தியா, ஜனநாயகம், நாகரீகம் யாவைக்கும் நீங்கள் தீமை விளைவிக்கிறீர்கள்.

**பிரிடிஷ் லேபர் கட்சிக்கும், இந்திய காங்கிரஸ் நண்பர்களுக்கும் வார்தா தீர்மானம் அதிக குழப்பத்தைச் செய்கிறது. காங்கிரஸ் தலைவர்களே அவ்விதம்**

சொல்லியிருக்கும் போது நாங்கள் என்ன செய்யலாம்? பிரிடிஷாரின் முன்பாக வெகுகாலமாக கௌரவம் பெற்ற மிஸ்ட்டர் காந்தியைப் பற்றிதான் நாங்கள் எவ்வாறு நடந்து கொள்ள முடியும்?

மிஸ்ட்டர் காந்தியின் செய்தியில் அதிகமாக 'அப்படியாகில்' என்ற பாவனைக்கள் காணப்படுகின்றன. ஜோஸியம் சொல்லுகிறவன் கூட இவ்வளவு கன்டிஷன்களை உபயோகிக்கமாட்டான்.

உங்களுடைய திட்டங்கள் தப்பானவை என்று நாங்கள் நினைக்கிறோம் கஷ்டப்படும் இந்தியப் பொதுமக்களின் அபிப்பிராயங்களை நீங்கள் சொல்லவில்லை யென்றும் நினைக்கிறோம். தற்சமயத்தில் கொடுப்பதற்குச் சாத்தியமில்லாத திட்டங்களை நீங்கள் விரும்பினால் உங்களுடைய காரணமே முறிந்து விடும். உங்கள் விஷயங்களைப்பற்றி எடுத்துரைக்கும் எங்களது செல்வாக்கையும் கெடுக்கிறீர்கள்.

இன்னும் அதிகமான தீங்கையே உண்டுபண்ணிக்கொள்ளுவீர்கள். நேசநாடுகளின் லக்ஷியங்களுக்கும், தேசீய வாதங்களின் நிலைகளுக்குமுள்ள வித்தியாசத்தை இந்தியத் தலைவர்கள் அறிய முடியவில்லை என்று உலகம் நினைக்கும். ஸ்வதந்திரம், ஸமதை, முதலியவைகளுடன் ஜனங்கள் முன்னேற்றமடைவதை விட அரசியல் தந்திரமே மேலானதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

## III

# அமெரிக்காவிற்கு ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் எடுத்துரைத்தது.

(ஜுலை 26).

### "இந்தியாவை விட்டகலு" என்ற இயக்கம்.

இந்தியாவில் வேரூன்றிய மதவேற்றுமைகளிருக்கும்போதும், சட்டத்திற்குட்பட்ட அரசாங்கம் ஏற்படாமலிருக்கும்போதும் நாம் இந்தியாவை விட்டு வெளியேறவேண்டுமென்று மிஸ்ட்டர் காந்தி விரும்புகிறார். பொறுப்புள்ள எந்த அரசாங்கமும் அப்படிச் செய்யாது, அதுவும் யுத்த காலத்தில் செய்யவே செய்யாது.

மிஸ்ட்டர் காந்தியே பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—'அதனால் வீண் கலவரம்தான் ஏற்படும்.'

தற்சமயத்தில் இந்தியா அச்சுநாடுகளை எதிர்க்கும் முன் அரங்கத்தில் இருக்கிறது. ஜப்பானை எதிர்த்து இந்தியர்களைப்போல் பிரிடிஷ், அமெரிக்கர், சீனர் யாவரும் சண்டை செய்கின்றனர். அமெரிக்கர்களுக்கும், சீனர்களுக்கும் பிரிடிஷ் அரசாங்கம் கொடுத்துள்ள வாயமொழிகளை ஊர்ஜிதப்படுத்தவேண்டுமானால் இந்தியாவை பத்திரமான தளமாக அமைக்கவேண்டும். அங்கிருந்துதான் ஜப்பானியரை எதிர்க்கமுடியும். இந்தியாவிற்குள் எதிரிகள் புகுந்து நேசர்தசச் சைனியங்களுக்கு இடைஞ்சலேற்படும்படி எந்த அரசியல் கட்சியையும், தலைவனையும் செய்யவிடக்கூடாது.

### நேசதேசங்களுக்குள்ள பந்தகங்கள்.

நாம் அமெரிக்கர்களுக்கும் "பிரிடிஷ்காரர்களுக்கும் மாத்திரம் கட்டுப்பட்டிருக்கோமென்பது அல்ல, இந்தியர்களுக்கும் கட்டுப்பட்டிருக்கிறோம். இதனால்தான் இந்திய நிலைமையைக்கண்டு நமது நாடு அதிக கவலை எடுத்திருக்கிறது.

உங்கள் மக்களும், எங்கள் மக்களும் இந்தியாவைப் பாதுகாக்க ஈடுபட்டிருக்கின்றனர். நம்மிருவருடைய திட்டம் இந்தியாவைப் பாதுகாப்பதுதான். ஆனால் மிஸ்ட்டர் காந்தியும் காங்கிரஸும் வேறுவிதமாக நினைக்கிறார்கள்.

மிஸ்ட்டர் காந்தி தாமதிக்கப்போவதில்லை, ஸ்வதந்திரத்தையும் நேச நாடுகளின் புனித காரணங்களையும் கெடுத்துவிடுவார்.

தனது கட்சிக்கு அதிகமான அரசாங்க அதிகாரத்தைப் பெறவே இவ்விதம் பயமுறுத்துகிறார். ஆனால் மற்ற பெரிய கட்சிகள் மிஸ்ட்டர் காந்தியின் திட்டங்களுக்கு விரோதமாக இருக்கின்றன என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

## இந்தியாவின் க்ஷேமம்.

அவர் இவ்வித முடிவிற்கு வந்ததுபற்றி நான் கவலைகொள்ளுகிறேன். இந்தியர்கள் யாவரும் அவரைப் பின்பற்றவில்லை. சட்ட மறுப்பு இயக்கத்திற்குச் சிறிதளவு உதவி ஏற்படுமென்று அவர் நினைக்கலாம். ஆனால் நேசநாடுகளின் சார்பாக நாம் இந்தியாவை ஒரு பத்திரமான தளமாகச் செய்துகொண்டு ஜப்பானியரை எதிர்க்கவேண்டும். எவ்வித நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமானாலும் நாம் பயமின்றி எடுக்கவேண்டும்.

வெற்றி கிடைத்த பின்பே இந்தியா ஸ்வதந்திரம் பெற்று தனது சுய ஆட்சிக்கு லாயக்கான அரசாங்கத்தை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த வெற்றி அடையப்படவேண்டும், எவ்வளவு முன் யோசனையுடனிருந்தாலும் கிழக்கே நேசநாடுகள் வெற்றி பெறுவதைத் தடுத்துச் செய்யப்படும் நடவடிக்கைகளை நாம் அடக்கவேண்டும்.

உலகத்திற்கே இவைகள் மிக முக்கியமானவை. அமெரிக்கர், சீனர், இந்தியர், பிரிடிஷ்ஷார் யாவரும் உலகத்தின் விடுதலைக்காக தைரியமாகச் சண்டையிடும்போது இந்தியாவிலோ, மற்ற நாடுகளிலோ, ஒரு சார்பினர் மாத்திரம் தடை செய்வதை நாம் விட்டுவிடக்கூடாது. இது இந்தியாவின் அக்கரையோடு மட்டுமில்லாது சைனா, பிரிடன், அமெரிக்கர் யாவருடைய அக்கரையுமாகும்.

---

# ஸர்வதேச சமுதாயத்தை நாம் அமைக்கவேண்டும். இல்லாவிடில் நாம் அழிந்து போவோம்.

அந்நிய நாட்டு மந்திரி, மிஸ்ட்டர் ஈடன் பிரசங்கம்.

நாட்டிங்ஹாம், ஜுலை 23.

“இன்று இந்த நிமிஷத்தில் யுத்தம் உச்ச நிலையை அடைந்துவருகிறது. ருஷ்யாவிலும், எகிப்திலும் நமது நேசதேசத் துருப்புகளும், பிரிடிஷ் ஏகாதிபத்தியப் படைகளும் ஒரே போர்முனையில் ஒன்று பட்டு வேலை செய்கின்றன. யுத்தம் எவ்வளவு காலம் நடக்கும் என்பதை இதன் விளைவு வெகுவாக நிர்ணயிக்கும்.

“ருஷ்யர்கள் தங்கள் தேசத்தைக் காப்பாற்றுவதற்காக உக்கிரமாகவும், வெகு தீரத்துடனும், கவசமணிந்த எதிரிகளை எதிர்த்துப் போராடுகின்றனர்.

“இந்த யுத்தம் நீண்டகாலம் நடந்தாலும் சரி, அல்லது வெகு சீக்கிரத்தில் முடிவடைந்தாலும் சரி, நாங்கள் எங்களுடைய நேசதேசங்களுடன் சேர்ந்து இப்போரை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவரப்போகிறோம் என்பதில் எதிரிகளுக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டியதில்லை.

“முன்னேறுவதில் தாற்காலிகமான தடைகளோ, அல்லது ஏமாற்றமோ, அல்லது சில போர்முனைகளில் தோல்வியோ, போரை நீடித்து நடத்துவதற்கான எங்களது தீர்மானத்தை மாற்றி விடமுடியாது, அச்சுநாட்டு வல்லரசுகள் யாவும் ஆயுத வலிமை யெல்லாம் இழந்து உலகத்தாருக்கு இனிமேல் கெடுதல்கள் செய்யமுடியாமல் பலஹீனமாய்ப் போகும் வரை நாங்கள் அவர்களை எதிர்க்க எண்ணியிருக்கிறோம்.

"ஏனென்றால் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் சமீபத்தில் நடந்த ஜெர்மன் அட்டூழியங்கள் இவ்வுலகத்தையே திடுக்கிடச் செய்துவிட்டது. காட்டுமிருண்டித் தனமுள்ள தனிப்பட்ட நாஸி சிப்பாய்களோ அல்லது உத்தியோகஸ்தர்களோ இச்செய்கைகளை நடத்தினார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஜெர்மன் ஸர்க்காரின் கொள்கையை இவை நிரூபிக்கின்றன. அதன் ஆட்சியும் கொடுங் கோன்மைதான்.

"இக் கொடுங்கோல் ஆட்சியினால் விளையக்கூடிய பயன்களை நாஸிகள் நன் குணர்ந்திருக்கின்றனர்.

"ஜெர்மனியின் அட்டூழியச் செய்கைகளினால் இவ்வுலகத்தார்களின் அனு தாபத்தை அது முற்றிலும் இழந்துவிட்டது. கோயபெல்ஸ் ஜூன் மீ 15வ பெர்லினில் பேசுகையில் இவ்விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறான். ஜெர்மனியை ஆளுபவர்கள் மனிதவர்க்கத்திலிருந்து துண்டித்துக்கொண்டு விட்டார்கள். அதனால் அவர்கள் மீதுள்ள உலகத்தாரின் அனுதாபமும் அற்றுப் போய்விட்டது.

## முயற்சி பலிக்கவில்லை.

"இவ்விதம் காட்டுமிருண்டித்தனமாக நடந்துகொண்டதில் நாஸிகளின் நோக்கம் நிறைவேறவில்லை. அவர்களின் கொடிய செய்கைகளினால் நேச தேசத்தார்களின் பலத்தைக் குலைக்க முடியவில்லை. உண்மையில் நேசநாடுகள் ஒன்று சேர்ந்து நாஸிக்கொள்கையை அழிக்க பலமாக எதிர்த்துவருகின்றன.

"அதனால் நேசநாடுகளின் சேர்க்கை இன்னும் பலப்படுத்தப்பட்டது. எங்களில் யாருக்காகிலும் நாஸிகள் கெடுதல் விளைவித்தால், அது எல்லோருக்கும் நேர்ந்ததாகக் கருதப்படுகிறது. நாங்கள் ஒன்று சேர்ந்து சரியான சமயம் வாய்க்கும் பொழுது எச்செலவிலும் எதிரிகளுக்குத் தகுந்த தண்டனை விதிப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம்.

"இவ் யுத்தத்தில் வெற்றிக்காகவும் அதன்பின் வேண்டிய ஏற்பாடுகளுக்காகவும் நாம் ஒன்று சேர்ந்து முயற்சித்து வருகிறோம். பயம், பசிப்பிணி, நம்பிக்கை யின்மை முதலியவை நிறைந்த உலகத்திற்கே மீண்டும் வருவதற்காக இவ்வளவு வருஷங்கள் வரை நாம் போராடவில்லை.

"பயம், தயவு, தாக்ஷண்யம் இல்லாமல் ஒவ்வொரு தேசமும் ஸ்வந்திரமாய் வாழ்ந்து, தாராளமாய் வேலை செய்யக்கூடிய ஒழுங்கான சட்டத்திற்குக் கீழ் படிந்து நடக்கும் ஸர்வதேச சமுதாயத்தை நாம் அமைக்கவேண்டும். இல்லா விடில் காட்டுமிருண்டித்தனமான சண்டையில் நாம் அழிந்து போவோம்.

"இத்தருணத்தை நாம் இழப்போமானால் வேறொரு சந்தர்ப்பம் வாய்ப்பது அரிது. யுத்தம் முடிந்த பிறகு சிலவல்லரசுகள் மட்டில் ஆக்கிரமித்த நாடுகளை வசப்படுத்திக்கொண்டு மற்ற நாடுகளை அடிமையாக்கிக்கொள்வார்கள் என்று நாம் எண்ணுவது தவறு.

"உலகம் பூராவுமே விழித்துக்கொண்டுவிட்டது. நிறம், ஜாதி, மதம் முதலிய வித்தியாசமின்றி ஜனங்கள் அணிவகுத்துச் செல்லுகின்றனர். கைத்தொழில் அதிகம் அபிவிருத்தியாகிவிட்டது. அதனால் இவ்வுலகத்தி லுள்ள ஒவ்வொருவனுக்கும் போதிய உணவும், நாகரீகமாக வாழ்வதற்கான வசதியும் ஏற்பட்டுவிடும்.

"பரிபூரணமான உற்பத்தியையும், நேர்மையான விநியோகத்தையும் நிர்ணயித்து ஒழுங்குபடுத்துவதே இப்போதைய பிரச்னையாகும். நன்றாகச் சாப்பிட்டு ஆரோக்யமாயுள்ள ஜனங்களே ஒரு சிறந்த உலகத்திற்குப் பலன்தரத் தக்க முறையில் வேலைசெய்யமுடியும். இது சொற்பகாலத்திற்குள்ளோ, எளி தாகவோ செய்து முடிக்கக்கூடிய காரியமில்லை. இதற்கு எல்லா தேசங்களின் ஒத்துழைப்பு அவசியம் வேண்டும். அவைகளின் சக்திக்கும், அனுபோகத்திற்கும் தகுந்தவாறுதான் உலக சீர்திருத்தம் ஏற்படும்.

"யுத்தத்தை ஜயிப்பது எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டம் சமாதானத்தை அடைவது. தேசீய ஒற்றுமை நமக்கு அவசியம். நாம் சுயநலம் பாராட்டாமலும், தியாகம் செய்யத் தயாராகவும் இருப்பது அவசியம்.

## ஆங்கிலோ-அமெரிக்க நட்பு.

போரிடும் நேசநாடுகளுக்குள் உண்மையான சிநேகம் இருக்கவேண்டியது அவசியம். எல்லோருக்கும் நன்மை ஏற்படும்வகையில் தன்னுடைய வாழ்க்கையையும், சாதனங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு ஒவ்வொரு தேசத்திற்கும் சந்தர்ப்ப மளிக்க தாங்கள் உறுதிகொண்டிருப்பதாக ஜனதிபதி ரூஸ்வெல்ட்டும், இதர ராஜீய வாதிகளும் கூறியிருப்பது மிகவும் உத்ஸாகத்தைத் தருகிறது.

"அவர்களுடன் சேர்ந்து வேலைசெய்ய நாம் தயார்.

"யுத்தத்தில் காட்டிய ஊக்கத்துடன் சமாதானத்திற்காக வேலை செய்ய தேசங்கள் தவறிவிட்டதால் நாம் சமாதானத்தை இழந்தோம். அதே தவறு சுலை நாம் இனியும் செய்யக்கூடாது. மீண்டும் ஜெர்மனியுடன் போர் தொடுக்க வேண்டிய அவசியமும் கூடாது.

"வெற்றிக்குப் பின் வலுவில் போர் தொடுக்கும் நாடுகளின் ஆயுத பரிஹாரணம் பரிபூர்ணமாக யிருக்கவேண்டும். பட்டினிகிடக்கும் ஜனங்களுக்கு உணவளிப்பதே முதல் வேலை. இது சம்பந்தமாக ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

"அழிக்கப்பட்டுப் போன தேசங்களிலும், கைத்தொழிலையும், விவசாயத்தையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய மற்றொரு பிரச்னையும் இருக்கிறது. பொருளாதார உதவியும், பண உதவியும் ஒரு தேசம் அடைவதினுல் மட்டில் அது தன் ஸ்வதந்திரத்தை இழந்து விடக்கூடாது.

"சுய ஆட்சிக்கு வேண்டிய சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்கு அதில் அனுபவமில்லாத ஒவ்வொரு தேசத்திற்கும் வேண்டிய உதவி அளிக்கப்படும். அது முன்னேற்றம் அடைவதற்கான ஏற்பாடும் எடுத்துக்கொள்ளப்படும்.

## எதிர்கால உலகப்போக்கு.

"தீர்க்காலோசனையின் பேரில் அரசியல் திட்டத்தை எதிர் பார்த்து அமைப்பதைப் பொறுத்து யுத்தத்திற்குப் பிறகு உலகத்தின் எதிர்கால நிலைமை இருக்கும்.

"வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழிக்க வேண்டும். ஒருவர் அதிக பணக்காரராகவும், மற்றொருவர் அதிக ஏழையாகவும் செய்துவிடக்கூடாது. அநேகர்களுக்கு முன்னேற்றமடைய போதிய சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் இருக்கும் படிக்கும், ஊழல்கள் நிறைந்திருக்கும் படிக்கும் செய்துவிடக்கூடாது.

"இதற்கெல்லாம் மற்ற நாடுகளுடன் நாம் வியாபாரம் செய்யும் சக்தியைப் பொறுத்து இருக்கிறது. பரஸ்பர சிநேகப் பான்மையை அடிப்படையாகக் கொண்டு பல தேசத்தார்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளவேண்டும். நமது தேசத்தில் ஆரம்பித்தும், நமது அண்டை நாடாகிய அமெரிக்காவிலும் அத்தகைய உணர்ச்சியுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளும்படி விசேஷ சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்திருப்பது நமது அதிர்ஷ்டம தான்.

"இப்பொழுது பிரிட்டனில் அமெரிக்கத் துருப்புகள் ஏராளமாக வந்து இறங்கியது முதல், நமக்கும், அமெரிக்காவுக்கும் சிநேகத்தில் ஒரு புது மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்கர்களுக்கும் நமக்கும், யுத்த காலத்தில் மனப்பூர்வமாக ஏற்படும் சகோதரத்வம், யுத்தத்திற்குப் பிறகு சமாதானம் ஏற்படும் பொழுதுகூட நீடித்திருக்க வேண்டும்.

"பொது மனிதனுக்கு அரிய சந்தர்ப்பமும், சுயமரியாதையும், கௌரவமும், ஸ்வதந்திரமும் முதலிய மூலப்பொருள்கள் எல்லோருக்கும் சமம் என்று நாமும், அமெரிக்கர்களும் பார்ப்பதாகத் தோன்றினால்தான் நமக்கும், அவர்களுக்கு மிருக்கும் சகோதரத்வம் நீடித்திருக்கும்.

"ஆங்கிலோ-அமெரிக்க நட்பின் எதிர்காலம் இத்தேசமக்களின் கையிலேயே முதன் முதலாக வந்திருக்கிறது. தற்செயலாய் ஏற்பட்ட இந்த யுத்தத்தினால் சமாதானத்திற்கு நிரந்தரமான அனுகூலம் வரவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்."

---

பிரஸங்கம் CVI.

# பார்மோஸா.

(அல்லிங்டன் கெனார்டு எழுதியது).

---

## ஆக்கிரமணத்திற்கு முதல் பலி.

பார்மோஸா ஜப்பானுக்கு அடங்கிய பழமையான குடியேற்ற நாடு. ஜப்பான் குடியேற்ற நாட்டை நடத்தும் விதத்திற்கு இது ஒரு முக்கிய உதாரணமாகும். ஆசியா வாசிகளையும், ஆசியா நாடுகளையும் ஜப்பான் நடத்தும் விதத்திற்கு ஜப்பானிய சாம்ராஜ்யத்தில் பார்மோஸாவில் முதலில் ஜப்பானிய புது திட்டம் அமுலுக்கு வந்தது. இப்புது திட்டம் கொரியா, மஞ்சூரியா, இன்னும் சைனாவில் ஐந்து வருஷகாலமாகப் பிடித்து வந்த நாடுகள் இவைகளில் சிற்சில மாறுதல்களுடன் அமுலிலிருந்து வருகிறது. ஆனால் பலாத்காரமென்பது எங்கும் ஒரு மாதிரிதான். இவைகளில் பார்மோஸா ஜப்பானிய சாம்ராஜ்ய ஆசையினால் பிடிக்கப்பட்ட நாடு. அதைப் பிடிக்கும்பொழுது ஜப்பானில் தொழிற்சாலை விருத்தியினால் ஏற்பட்ட அதிக சாமான்களை விற்கும் அவசியமோ, அல்லது ஜனத்தொகையின் அதிகத்திற்காக வேறொரு நாட்டைப் பிடிக்கும் அவசியமோ கிடையாது.

### பிரதேசத்தின் அழகும், எஜமானனும்.

1895-ல் ஜப்பான் பார்மோஸாவைக் கைப்பற்றியது. அதாவது அவ்வருஷத்தில்தான் ஷிமோனோஸேக்கி என்ற இடத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையின் படி சைனா பார்மோஸாவை விட்டது. ஆனால் சைனா அரசாங்கம் கைவிட்ட போதிலும் அத்தீவிலிருந்தோர் தனி அரசாங்கத்தை நடத்தியதால் அவர்களைத்தனியே தோற்கடித்த பிறகுதான் ஜப்பானுக்குப் பூரா ஆக்கிரமணமும் பலித்தது. 57½ லக்ஷம் கொண்ட பார்மோஸா ஜனத்தொகையில் 90 சதவிகிதம் சீனர்கள். ஆசியா கடற்கரையிலிருந்து சுமார் 100 மைல் தூரத்தில் பார்மோஸா தீவு இருக்கிறது. சீனர்கள் இங்கு வெகுகாலத்திற்கு முன்பு குடியேறியிருக்கிறார்கள். 17-வது நூற்றாண்டில் சீன வீரனான கோக்ஸிங்கா என்பவன் டச்சுக்காரர்களை விரட்டி ஸ்வாதீனப்படுத்திக்கொண்டான். புகீன், குவான்டங் மாகாணங்களிலிருந்துதான் பார்மோஸாவுக்கு அதிகச் சீனர்கள் குடியேறினார்கள். இவர்களைத்தான் ஜப்பான் அத்தீவு வாசிகள் என்று அங்கீகரித்திருக்கிறது. சீனர்களுக்குமுன் அங்கிருந்த புராதன வாசிகள் 1,60,000. இவர்களையும் தவிர 50,000 அயல்நாட்டினரும் இருக்கின்றார்கள். சைனியத்தில் சேர்ந்த வாசிகளைத் தவிர 3,00,000 ஜப்பானியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தான் அரசாங்கம், வியாபாரம் முதலியவைகளை நடத்தி வருகிறார்கள்.

### "அழகிய தீவு."

"யால்ஹா பார்மோஸா, அழகிய தீவு" என்று 16-வது நூற்றாண்டில் சென்ற ஸ்பெயின் தேசத்தினரும், போர்ச்சுகீஸாரும் பெயர் வைத்தார்கள். இவர்கள் மாக்கோ போலோ என்று புராணத்தில் சொல்லப்பட்ட தங்கத் தீவுகளைக் கண்டு பிடிக்கச்சென்ற பொழுது பார்மோஸாவைக் கண்டுபிடித்தார்கள். இதன்

கடற்கரையில், ஹர்க்கா செம்படவர் வசித்துவந்தார்கள். மலைகளில் மலேயா விஜள்ளோரின் இனத்தினர் வேட்டையாடி வந்தனர். காடுகளில் கற்பூர மரங் கள் அதிகம். உலகத்தின் கற்பூர ஸப்ளையில் 70 சதவிகிதம் பார்மோஸாவி லிருந்து கிடைக்கிறது.

## அபூர்வமான தீவு.

ஜப்பானியரைத் தவிர மற்றவர்களுக்கு அத்தீவில் வியாபார சம்பந்தமில்லாத தாலும், பாதிரிமார்களின் நடவடிக்கைகள் கடுமையாக அடக்கப்பட்டிருந்ததா லும் ஜப்பானியருக்கு அதிக சாதாகமாக இருந்தது. ஜப்பானிய ஆட்சியைப் பற்றி வெளிநாடுகளுக்கு ஒரு தகவலும் கிடைப்பதில்லை. தங்களிஷ்டப்படி அரசாங்கம் நடத்தப்படுகிறது. சில வருஷங்களாகத்தான் ஜப்பானிலுள்ள இங்கிலீஷ் பத்திரிகைகள் கொஞ்சம், கொஞ்சமாக விஷயங்களைத் தெரியப் படுத்துகின்றன. பார்மோஸா வாசிகளைக் கூட்டமாகக் கொலைசெய்வது முதலிய வைகளைப் பற்றிய விஷயங்களை ஜப்பானியப் பத்திரிகைகளும் வெளிப்படுத்து கின்றன. ஆனால் ஜப்பானிய சாம்ராஜ்ய முறைப்படி நடத்துவதாக மட்டில் சொல்லிக்கொள்ளும். ஜப்பானில் தேசிய உணர்ச்சி அதிகமாக உண்டானதாலும், 1937-ல் பார்மோஸாவில் ராணுவ ஆட்சி ஏற்பட்டதாலும், பத்திரிகைகளுக்கு கடுமையான பிரசுரத்தடை ஏற்பட்டதாலும், ஆங்கிலேயோ-அமெரிக்கப்பத்திரிகை கள் மறைந்ததாலும் பார்மோஸாவைப் பற்றிய தகவலே வெளிநாடுகளுக்குக் கிடைப்பதில்லை.

இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் அத்தீவைப்பற்றிய சில உண்மை விவரங் கள் கிடைத்தன. 1902-ல் பார்மோஸாவில் பிரசுரத் தடை பலப்பட்டது. பார்மோஸா அரசாங்கத்தை ஜப்பானிய மூல அரசாங்கம் மேல்பார்த்து வந்தது. அந்த மந்திரி சபை பேருக்கு மட்டில் அரசாங்க விஷயங்களைக் கவனித்து வந்தது. உண்மையில் அவ்விஷயங்களில் தலையிடுகிறது கிடையாது. ஏனென்றால் தேசப்பற்றேயில்லை என்ற கண்டனத்தினாலும், உள்நாட்டிலுள்ள விஷயங்களை விஸ்தாரமாக விவாதிப்பதற்குப் போதுமான அவகாசம் இல்லாததி னாலும் தலையிடுகிறதில்லை. ஜப்பானிய மந்திரி சபை வருஷத்தில் மூன்று மாதங் களில்தான் கூடுகிறது. இன்னும் எல்லாவற்றைக் காட்டிலும் பெருத்த தடை என்னவென்றால் பார்மோஸாவானது கப்பற்படையைச் சேர்ந்தவோ, அல்லது தரைப்படையைச் சேர்ந்தவோ, ராஜப்பிரதிநிதியால் ஆளப்பட்டு வருகிறது. அது தேசசரித்திரத்தில் பெரும்பான்மையான காலத்தில், அதாவது முதல் 24-வருஷங் களுக்கும், மறுபடியும் 1936-ம் வருஷம் முதலும், ராணுவத் தலைவரால் அரசாளப்பட்டு வருகிறது. அதனால் ஜப்பானில் தரைப்படைத் தலைவர்களைப் பற்றியோ, கப்பற்படைத் தலைவர்களைப் பற்றியோ கண்டனம் செய்வது பொதுவாக லாபகரமானதல்ல. எப்பொழுதும் பலிப்பதில்லை.

## ஜப்பானியருக்குள்ள ஆனந்தம்.

ஜப்பானில் போலீஸ் ஸ்டேஷனில் ஏராளமாகக் கொலைகள் நடப்பது ஸர்வ சாதாரணமானது. ஜப்பானிலும்கூட வீடுகளில் குடும்ப ஸ்திரீகள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்கிறார்களா என்று அடிக்கடி போலீஸ் உத்தியோகஸ்தர் கள் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் பார்ப்பதுண்டு. குடியேற்ற நாடுகளிலிருக் கும் போலீஸார் தாழ்ந்த ஜாதியிலிருந்து பொருக்கி எடுக்கப்பட்டவர்கள். அவர் களுக்கு அந்தந்தவூர் ஜனங்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரம் கிடைத்ததும், நரிக்கு மணியம் கிடைத்தமாதிரி ரொம்பவும்கேவலமாக நடந்து கொள்ளுகிறார்கள். பார்மோஸாவில் கைதியை விடுவிக்கிற சட்டம் அமுலில்லை. அங்கு போலீஸார் யாதொரு காரணமும் சொல்லாமல் ஒருவரை கைதி செய்யக்கூடும். கைதியை விசாரணைக்காக ஆஜர்படுத்த வேண்டிய தேவையுமில்லை. குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முறை மிகவும் கொரமாயிருக்கும். 100 நிரபராதிகளை அவஸ்தைப்படுத்தியாவது ஒரு குற்றவாளியைத் தப்பவிடாமல் செய்கிறார்கள். எரிக்கப்பட்ட சவத்தைப் பெற்றுப்போகும்படி போலீஸ் ஸ்டேஷனுக்குத் தருவிக்கப்பட்ட பந்துக்கள், விவரம் கேட்காமல் போவதே மேல் என்று

அறிந்திருக்கிருர்கள். போலீஸாரின் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. சவுக்கடி முதல், தண்ணீரில் அமுக்கி வயிறு வெடிக்கும்வரை பலாத்காரம் செய்வார்கள். இதைத் தவிர, மிகவும் சாமர்த்தியமுள்ள வக்கீல்கூட குறுக்கு விசாரணையின் மூலம் அவனிடமிருந்து அவனுக்கு விரோதமாக வாக்கு மூலம் வாங்கும் சிரமமில்லாமல், தீப்பற்றிய சுருட்டை அவன் மூக்கில் திணித்து ஒப்புதல் வாங்குவார்கள். சில சமயங்களில் நகங்களுக்குள் ஊசி ஏத்துவதும், மணிக்கட்டுகளில் கட்டி கூரைகளிலிருந்து கைதிகளைத் தொங்கவிடுவதும் அவர்களின் சாதாரண முறைகள்.

சதியாலோசனை விசாரணைகளில் ஒரு கேஸ் நடக்கும்பொழுது பேர் தெரிவிக்காத பார்மோஸான் ஒருவன் டோக்கியோ நியாயவாதிகள் சங்கத்திற்கு எழுதியதில் பின்வருமாறு கண்டிக்கிருன் :—

"நீதிபதிகளுக்கு முன் கொண்டுவருவதற்குள் கைதிகளுக்குப் பெருத்த தண்டனை விதிக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான பேர்கள் சந்தேகத்திற்காகக் கைதி செய்யப்படுகிருர்கள். அவர்களில் பத்தில் ஒரு பங்குதான், ஏதாவது ஒரு பங்குதான் ஏதாவது குற்றம் செய்திருப்பார்கள் என்று எனக்கு அறிவிக்கப் படுகிறது. பாக்கிப் பேர்களையும் நிர்ப்பந்திக்காமல் இருப்பதற்காகக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி பலவந்திக்கப்படுகிருர்கள். ஏற்கனவே இந்த துர் அதிர்ஷ்ட சாலிகளில் நாலைந்து பேர்கள் நிர்பந்தத்தினுல் கொல்லப்பட்டார்கள். பத்து கைதிகளில் 8, 9 பேர்களுக்கு இந்த முறையில் காயமுண்டாகிறது. ஜனங்களின் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்தக் கூடியவர்களான நியாயவாதிகள் கைதிகளின் கட்சியை எடுத்துப்பேச அனுமதிக்கப்பட வில்லையென்று எனக்குத் தெரிகிறது."

## கொள்ளை.

பார்மோஸாவைப் பற்றிய விஷயங்களைப் பிரசுரிக்கும் ஜப்பானியப் பத்திரிகைகளில் உண்மையான விவரங்கள் மறைக்கப்படுகின்றன. அவைகளுக்குப் பதிலாக பார்மோஸாவில் காணப்படும், விவசாயம், தொழிற்சாலை இவைகளின் முன்னேற்றத்தைப்பற்றிய கணக்குகள் கொடுக்கப்படுகின்றன. 40 வருஷகாலத்தில் அரிசி உற்பத்தி 500 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. அயல்நாட்டு வியாபாரம் 30 மடங்கு அதிகரித்திருக்கிறது. 5,10,00,000 பவுன் மதிப்பு ஏற்றுமதியிலும், 3,50,00,000 பவுன் மதிப்பு இறக்குமதியிலும் வியாபாரம் நடந்திருக்கிறது. இவ்வித முன்னேற்றம் ஜப்பானின் கொள்ளையடிக்கும் சிந்தனையினுல் ஏற்பட்டதுதான். ஏனென்ருல் ஏற்றுமதி, இறக்குமதிகளில் 90 சதவிகிதம் ஜப்பானுடன் நடைபெறுகிறது. எல்லாத் தொழிற்சாலைகளும் ஜப்பானுல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. கற்பூரம், உப்பு, புகையிலை, சாராயம் முதலியவை அரசாங்கத்தாருக்கு உட்பட்டவை. எல்லாகாடுகளும் அரசாங்கத்தார் வசமிருக்கின்றன. எல்லா தேக்குமரக் காடுகளையும், அரசாங்கத்தாரே வைத்துக்கொண்டிருக்கின்றனர். கைத்தொழில் பார்மோஸா முன்னேற்றக் கம்பெனியின் வசத்திலிருக்கிறது. சர்க்கரை மில் போன்ற விவசாயக் கைத்தொழில்கள் 90 சதவிகிதம் இருக்கின்றன. இவைகள் யாவும் ஜப்பானிலுள்ள முதலாளிகளின் பேரைவைத்து அவர்களுடைய அக்கரைக்காக நடத்தப்படுகின்றன.

## தெற்கு நோக்கிய முன்னேற்றம்.

1936-ல் பார்மோஸா ஒரு புதிய நிலையை அடைந்தது. ஜப்பானியரின் தெற்கு நோக்கிய முன்னேற்றத்திற்கு இது மூல ஸ்தானமாக ஆயிற்று. ஜப்பானியரின் கடற்படை திட்டத்தில் தென்மேற்கு ஆசியாவை நோக்கி முன்னேறுவதென்பது காணப்பட்டது. 1931லு முதல் ஜப்பானியக் கப்பற்படை புதிய நாடுகளைக் கைப்பற்ற ஆசை கொண்டது. தெற்கு சைஞ, பிலிப்பைன்ஸ் தீவுகள், இந்தியா ஆசியா, மலேயா, முதலியவைகளை ஆக்கிரமிக்க நினைத்தது. இதற்காக 1936-லு ஜூலை மாதத்தில் ஜப்பானியச் சட்டமொன்று அமுலுக்கு வந்து பார்மோஸா முன்னேற்றக் கம்பெனிக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இது ஒரு பொருளாதார இயக்கத்தை நடத்தியது. இதற்காக பார்மோஸா அரசாங்கம்

பாதி முதலும், மீதிப்பணத்தை பார்மோஸா சக்கரை கம்பெனியும், ஜப்பானியப் பொதுமக்களும் போட்டிருக்கின்றனர். 80 பேர்களடங்கிய அக்கமிட்டியில் குடியேற்ற நாட்டு மந்திரியான கவுண்ட் கோடாமாவும், அயல்நாட்டு மந்திரி சபை, யுத்த மந்திரி சபை, கப்பற்படை மந்திரி சபை, இவைகளின் பிரதிநிதிகளும், பார்மோஸாவில் அதிக அக்கரையுள்ள ஜப்பானியக் கம்பெனிகளின் பிரதிநிதிகளும் சேர்ந்திருந்தனர். இந்த பார்மோஸா முன்னேற்றக் கம்பெனிக்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டு அயல்நாடுகளில் பண உதவிகொடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தது. ஒரு வருஷம் கிரமித்ததும் இதன் நோக்கங்கள் வெளிப்படையாகத் தெரிந்தன. ரகசியமாகச் சாராயம், எண்ணெய், ரஸ்தாக்கள் போடுவது, விமான மார்க்கங்களை ஏற்படுத்துவது, துறைமுக வசதிகளைச் செய்துகொள்வது, முதலியவைகளும் செய்யப்பட்டுவந்தன. இங்கிலீஷ், மலேயா டச்சு முதலிய பாஷைகளில் ஒலிபரப்புவது, பிரசாரம் முதலிய வேலைகளில் ஈடுபட்டிருந்தது. இவைகளே தெற்குநோக்கிய முன்னேற்றத்தின் ஆரம்ப ஏற்பாடுகளாகும்.

சுருக்கமாகச் செல்லும் பொழுது ரகசியமான எல்லா ஏற்பாடுகளிலும் பார்மோஸா முன்னேற்றக் கம்பெனிக்கு ஒரு பங்கு இருந்தது. அரிசி உற்பத்தி திட்டத்திலிருந்து விமான தளங்களை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு மாற்றிக்கொண்டதிலிருந்தே யுத்த வேலையில் இது ஈடுபட்டுவருகிறது என்பது வியக்தமான விஷயம். ஆனால் சமீபத்தில் வெளிவந்த ஜப்பானிய அரசாங்க புஸ்தகத்தில்கூட அவ்வித அபிப்பிராயம் இருப்பதாகக் காணப்படவில்லை.

## படையெடுப்புக்கு மூலஸ்தானம்.

1937-ல் ஷாங்காயியையும், நான்கிங்கையும் தாக்கிய கப்பற்படை பார்மோஸாவிலிருந்து கிளம்பியது. சீனக் கடற்கரையை முற்றுகையிடுவதற்கும், தெற்கு சைன, ஹைனங் முதலிய இடங்களை ஆக்கிரமிப்பதற்கும் லாய்க்கான கப்பற்படை பார்மோஸாவிலிருந்து புறப்பட்டது. பார்மோஸா முன்னேற்றக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு 2 வருஷங்களுக்குள்ளாகவே தெற்கு நோக்கிய முன்னேற்றமும் பார்மோஸாவிலிருந்து செய்யப்பட்டது. இதுவே பிரிடன் பேரிலும், அமெரிக்கா பேரிலும், செய்யப்பட்ட திடீர் யுத்தமாகும். "பார்மோஸாவை விமானமேற்றும் கப்பலாகவும், தெற்கு நோக்கிய படையெடுப்புக்கு தாய் கப்பலாகவும் சொல்லலாம்" என்று 1941-வுஸ் நவம்பர் 11உ டோக்கியோ ரேடியோவில் சொல்லப்பட்டது.

## மீண்டும், மீண்டும் அபகரிப்பது.

பார்மோஸாவில் ஜப்பானியருக்குச் சொந்தமான நிலங்களின் விஸ்தீர்ணத்திற்கு கணக்கே கிடையாது. ஆனால் அந்நிலங்கள் எவ்விதமாக வசப்பட்டது என்பதற்கு மாத்திரம் பலவித விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

ஒரே தடவையில் பிரதேசத்தின் 60 சதவிகிதத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டனர். ஏதோ சொந்த பாத்தியமிருப்பது போல கற்பூரக்காடுகள் உள்பட எல்லாக் காடுகளையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டனர். பிறகு கொஞ்சநாள் கிரமித்ததும் சொந்தக்காரர்கள் யாவரும் தங்கள் நிலங்களை மறுபடியும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு உத்தரவு போட்டு, அப்படி பதிவு செய்துகொள்ளாதவர்களுடைய நிலங்களையெல்லாம் அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டனர். இதில் அரசாங்கத்தாராக ஸ்வாதீனப்படுத்திக்கொண்ட காடுகளைப் பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. மேற்படி காடுகளில் பார்மோஸாவிலுள்ள சீனர்களுக்கு 100 வருஷகாலமாக இருந்த உரிமைகள் போய்விட்டன. ஆனால் சீனர்களுக்கிருந்த குத்தகை உரிமைகளின் ஆதாரத்தைக்கொண்டு, அங்கிருந்த இதர ஜாதியினருக்கு இன்றைக்கும் ஒரு பாத்தியமும் கிடையாதென்று ஜப்பானியர்களாக நிர்த்தாரணம் செய்துகொண்டனர்.

ஜப்பானிலேயே பொதுமக்களுக்கு நிலங்களில் ஒரு ஸ்வதந்திரம் உண்டென்ற பழக்கமே இல்லாததிலிருந்து அவர்களின் பஹிரங்கக் கொள்ளைத்தொழில் மிகவும் வியக்தமாக தெரிகிறது.

## ஜப்பானும், பார்மோஸா வாசிகளும்.

பார்மோஸா புராதனவாசிகளை ஜப்பானியர் அடக்கிய விதம் ரொம்ப பரிதாபகரமான கதையாகும். பிராணிகளைபோல் விரட்டிவேட்டையாடப்பட்டனர். மின்சார சக்திவாய்ந்த கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டு வருஷாவருஷம் துன்புறுத்தப்பட்டனர். இவ்விதமாக ஜப்பானின் குடியேற்ற நாட்டின் அரசாங்க முறையில் இவர்களை ஒழிப்பது என்பது ஒரு திட்டமாகும். 1902-ல் தான் பார்மோஸா வாசிகளை அடக்குமுறை ஆரம்பமாயிற்று. சீனர்கள் பார்மோஸா புராதன வாசிகளுடன், அவர்களுடன் அமைதியாக வாழ்ந்துவந்தனர். ஆனால் ஜப்பானியர்கள் யாவரையும் சக்ரவர்த்தியை வணங்குகிறவர்களாகச் செய்யும் நோக்கத்துடன் அதற்கிணங்காதவர்களெல்லாரையும் அழிக்கப்பார்க்கின்றனர். பார்மோஸா புராதன வாசிகள் மலேயா ஜாதியைச் சேர்ந்தவர்கள். வடக்கேயுள்ளவர்களுக்கு வேட்டையாடுவது தொழில். நாகரீகத்தின் மாறுதல்களை விரும்புவதில்லை. தெற்கிலுள்ளோருக்கு ஒரு தனியான பயிற்சியும், விவசாய முன்னேற்றமும் உண்டு. இவர்கள் யாவருக்கும் பொதுவான சட்ட திட்டங்கள் உண்டு. இவைகள் ஜப்பானியச் சட்ட திட்டங்களுக்கு விரோதமானது. ஆகவே ஜப்பானிய சமூக திட்டத்தை இவர்கள் மேல் கட்டாயப்படுத்துவது சிரமமாகிவிட்டது. விபசாரத் தொழிலுக்கு பார்மோஸா சட்டப்படிக்குக் கொலைதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஜப்பானியரால் அந்த ஸ்திரீகளை வசப்படுத்தவும் முடியாது. ஆனால், வெகுகாலம் கற்பூரக் காடுகளை வசப்படுத்தி வைத்துக்கொண்டதும், வேலைக்காரர்களாக வர மறுப்பது அவர்கள் விஷயத்தில் குற்றமென்று பாவிக்கப்படுகிறது. இப்படி பல வருஷங்களாகச் சச்சரவுகள் இருந்துவந்தன. 1909-ல் ஜெனரல் வைகவுண்ட் ஸகுமா கவர்னர் ஜெனரலாக வந்ததும், பார்மோஸா வாசிகளை அடக்குவதற்கு ஐந்து வருஷத்திட்டமொன்றைப் போட்டான். அதில் 10,000 துருப்புகளும், போலீஸ்காரர்களும் ஈடுபட்டனர். இந்த சிறு சண்டைக்கு "பார்மோஸா வாசிகளை அழிக்கும் சண்டை" என்று பெயர் கொடுக்கப்பட்டது. மின்சாரக் கம்பி வேலிகளுக்குள் அடைக்கும் வேலையை வைகவுண்ட் ஸகுமா தான் ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாக இக்கம்பிகள் நெருக்கப்பட்டு அதிலுள்ளோர் இறந்துவிடுவார்கள். 1915-ல் அடக்குமுறை பூரணமாக முடிந்தது. சில இடங்களில் அநேகமாகப் புருஷர்கள் இறந்துவிட்டனர். இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் அவர்கள் சண்டை செய்தனர். 1930-ல் மூஷா கலகம் ஏற்பட்டதும் 1,500 ஜப்பானியத் துருப்புகள் பழி வாங்கும் நோக்கத்துடன் 300 மைல் வேலிக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைத்தாக்கினர். ஒரு ஜப்பானியர்கள் வசிக்குமிடத்தில் பார்மோஸாவாசிகள் புகுந்து 140 ஜப்பானியர்களைக் கொன்றுவிட்டனராம். இதுதான் மூஷா கலகம்.

## குண்டுகள் போடுவதைப் பழகுமிடம்.

முன்புசொன்ன கலகத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு ஜப்பானியச் சைனியம் தனது சாமர்த்தியத்தையும், ஆயுதங்களின் பலத்தையும், பார்மோஸாவில் பழகிக்கொள்வதென்று தீர்மானித்துக்கொண்டது. 1913-லும், 1922-லும் விமானங்களிலிருந்து குண்டுகளைப் போட்டு பழகிக்கொள்ள பார்மோஸா உபயோகப்படுத்தப்பட்டது. 1930-ல் விஷப் புகை குண்டுகள் மூஷா ஜாதியினர் வசிக்குமிடத்திலேயே போடப்பட்டது. புதிய சிறு யந்திர பீரங்கிகளும் உபயோகிக்கப்பட்டன. இந்தப் பரீக்ஷைகளில் ஜப்பானியச் சைனியத்திற்கு அதிகப் பயிற்சி கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அடுத்த வருஷத்தில் ஸாமுரா கத்திமுறை உபயோகிக்கப்பட்டது. இதன்படி வேகமாக முன்னேறும்பொழுது எதிரிகளை வெட்டி சாய்க்கலாம்.

சில சிறிய சண்டைகளுக்குப் பிறகு 1935-ல் மலைகளிலிருந்து 26,000 பார்மோஸா வாசிகளைப் பள்ளத்தாக்குகளுக்கு அழைத்து வருவதென ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்தது. "இப்படிச் செய்வதால் காடுகளையும், உலோக உற்பத்தியையும் வசப்படுத்திக்கொள்வதோடு மின்சாரக் கம்பி வேலியில் அடைப்பது, போலீஸ் பந்தோபஸ்து முதலிய சிரமங்கள் இருக்காது".

நாம் கடைசியாக சொல்லப்பட்ட அபிப்பிராயம் ஜப்பானிய அரசாங்கத்தினுடையது. பார்மோஸா வாசிகள் காட்டுமிருண்டிகளாக இருக்கலாம். ஆனால், அந்த மலைகளில் தலைமுறைதத்துவமாக இருந்து வருகிறார்கள்.

### ஆழ்ந்த மௌனம்.

இவ்விதமாக ஜப்பானியரின் செய்கைகளை வர்ணிப்பது முடியாத காரியம். பார்மோஸாவின் உள்நாட்டில் யாவரும் பிரயாணம் செய்யமுடியாது. அனுமதி பெற்ற சிலரே செல்லலாம். சமீபத்தில் 1941 மார்ச்சு மீ த்தில் கூட ஒரு பெரிய கலகம் ஏற்பட்டது. அவைகளை அடக்குவதற்கு பெரிய சைனியங்கள் அனுப்பப்பட்டன. இதே விதமாக ஜப்பானியக் கொடிய ஆட்சியை எதிர்த்து அங்குள்ள சீனர்கள் செய்யும் கலகம் முதலியவைப்பற்றியும் நமக்கு சரியான விவரம் தெரிவதில்லை.

ஆனால் கலகத்திற்காக விசாரணை செய்வது, நூற்றுக்கணக்கான கைதிகள் விசாரணை ஸ்தலத்திற்கு அழைத்துவருவது முதலிய தகவல்கள் கிடைக்கும் போது மாத்திரம், ஜப்பானிய அரசாட்சி சரியானதல்ல என்று தெரிந்துகொள்ளலாம். ஜப்பானியருக்கும், ஜப்பானிய அரசாங்கத்தாருக்கும் திருப்தியில்லாமல் ஜப்பானிய குடியேற்ற நாடு அரசாங்கம் நடந்து கொள்ளுகிறதென்று நிரூபிக்கக் கூடிய சம்பவங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஜப்பானிய ஆக்கிரமணத்தின் 20-வது வருஷக் கொண்டாட்டத்தின் போது நடந்த கலகத்தில் 900 பேருக்கு கொலை தண்டனை விதிக்கப்பட்ட விவரத்தைப்பற்றி ஜப்பானிய சபையில் கேள்வி கேட்கப்பட்டது. டபனி என்ற இடத்தில் போலீஸ் ஸ்டேஷனை 400 பேர் தாக்கினார். அப்போது 285 பேர் கொல்லப்பட்டனர். 58 பேர் கைதி செய்யப்பட்டனர். இன்னும் எவ்வளவோ பேர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்று அறிந்துகொண்டு 900 பேர்களுக்குமாத்திரம் கொலை தண்டனை விதிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பேர்களுக்கு நீண்டகாலம் சிறை வாசம் விதிக்கப்பட்டது. ஆனால் ஜப்பானிய அரசாங்க அறிக்கையில் 96 பேர் தான் கொல்லப்பட்டதாக இருந்தது. மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டனராம். இதற்குமுன் 1914-ல் இதே மாதிரி ஒரு கலகம் நடந்து நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்டு மற்றவர்களுக்கு ஆயுள் பரியந்தம் சிறை வாசம் விதிக்கப்பட்டது.

### ஜப்பானியர் அல்லாதார் இறக்கவேண்டும்.

தற்போது கவர்னர் ஜெனரலாக இருக்கும் அட்மிரல் ஹஸிகவா என்பவன் பின்வருமாறு சொன்னான் :—

"லூசூஸனும், குமிஷூஷிவும் ஜப்பானிய மயமான மாதிரி பார்மோஸாவும் ஆகவேண்டும்."

இவ்விதமான ஜப்பானிய அரசாங்க முறை பார்மோஸாவின் பழக்கம், பயிற்சி, மதம், பாஷை முதலியவைகளைக் கெடுத்துவிட்டது. ஜப்பானியருக்குப்பட்ட ஜாதியாராக நடை, உடை பாவனைகளில் செய்யப்பட்டனர். வெகுகாலமாக இருந்துவரும் விடாமுயற்சியினால் சீனர்கள் மாத்திரம் உட்படவில்லை. ஜப்பானிய முறை அவர்கள் விஷயத்தில் பலிக்கவில்லை.

நாம் கொடுத்துள்ள விவரங்கள் எல்லாம் ஜப்பானியர் பிறருக்கு கொடுப்பதாகச் சொல்லிவரும் சமாதானம் க்ஷேமம் முன்னேற்றம் முதலிய அபிப்பிராயங்களுக்கு விரோதமாகத்தானிருக்கும். ஜெயிலில் அடைக்கப்பட்டவர்கள், கொலை செய்யப்பட்டவர்கள், முதலியவைகளைப் பார்த்தாலே, ஜப்பானியரின் விவரங்கள் பொய் யென்று தெரியவரும். சுயநலங்கருதியே ஜப்பான் பார்மோஸா விஷயத்தில் நடந்து கொண்டிருக்கிறது. சொத்துக்களைப்பறிப்பது, கொள்ளையிடுவது, அடக்குவது, பலாத்காரமாக வேலை வாங்குவது முதலியவைகளால் பார்மோஸாவின் மேன்மையைக்கெடுத்து ஆசியாவில் ஆதிக்கம் அடைய ஜப்பான் தன்னுடைய சைனியத்தைப் பலப்படுத்திக்கொண்டே வருகிறது.

# வார யுத்தச் செய்திகள்.

## 25—7—42-லிருந்து 31—7—42-வரை.

**ருஷ்யா.**—சென்ற வருஷத்தில் வான் ரன்ஸ்ட் துரத்தப்பட்ட இடமான **ரோஸ்டவ்** எதிரி வசமாயிற்று. இந்தத் தடவை ஜெர்மன் முன்னேற்றம் பூர்ண மாக இருந்தது. வேகமாயும் இருந்தது. ஒரு பகுதி டானெட்ஸ் வழியாக வோரோஷிலாவ் கிராட்டிலிருந்து முன்னேறியது. மற்றொன்று மில்லோரோ வோவிலிருந்து முன்னேறி நோவோசெர்காஸ்கில் சேர்ந்துகொண்டது. நோவோ செர்காஸ்க் வீழ்ந்ததும் எல்லாம் ரோஸ்டவ்வை நோக்கி முன்வந்தது. இத்துடன் மூன்றாவதான படை டாகன்ராக்கிலிருந்து வந்தது. நான்காவதான படை டானில் புகுந்து ஸிம்லியான்ஸ்காயா (Tsymlyanskaya) வரை வந்தது. ரோஸ்டவ் விற்குக் கிழக்கில் 150 மைல் தூரத்திலிருக்கிறது. இந்த இடத்தில் எதிரி டானைக் கடந்து ஸ்டாலின் கிராட்டைத் தாக்கிவருகிறான். ஸ்டாலின்கிராட்டிற்கு இரண்டு பக்கங்களிலிருந்து ஆபத்து: ஒன்று டான் நதிப் பக்கத்திலும், மற்றொன்று ஸிம் லியான்ஸ்காயாவிலிருந்தும். முக்கிய முன்னேற்றம் குஷ்கோவ்ஸ்க் (Kushchovsk) கிலிருந்து கிராஸ்னோடார் வரை போகும் ரயில்வே ரஸ்தா வழியாகத்தான் ஏற்படுகிறது. இது குபான் பிரதேசத்திற்குத் தலைநகர். வால்கா வழியாகச் செல்லும் ருஷ்யக் கப்பல்களை ஜெர்மானியர் தாக்கிவருகின்றனர். டான் நதியின் பாலங்களெல்லாம் வட காகஸஸில் தான் இருக்கின்றன. ஆகவே காகஸஸ்ஸைப் பிடிக்கச் சண்டை ஆரம்பமாயிற்று. ஆபத்து கெர்ச், ரோஸ்டவ், ஸிம்லியான்ஸ்க் பாகங்களிலிருந்து ஏற்பட்டிருக்கிறது.

ரோஸ்டவ்வோடு யூக்ரேன் பூரா எதிரி வசமாயிற்று. டானின் கரிசல் நிலங்களும் டானெட்ஸின் தொழிற்சாலைகளும் வசமாயின.

**வாரனேஷ்** தான் இந்த நிலைமையில் திருப்தியை அளிக்கிறது. இங்கேதான் ருஷ்யர்கள் தீவிர எதிர்ப்பைச் செய்கின்றனர். இருந்தாலும் பிரத்தியேகமான, வெற்றியைத்தான் ருஷ்யர்கள் இங்கே அடைந்து எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்திருக்கின்றனர். இங்கே ருஷ்யர்கள் எதிரியை விரட்டி இடது பக்கத்தில் தாக்கியிருக்கின்றனர். இதற்குத் தெற்கே 40 மைலில் நிஸ்னீடேவிட்ஸ்கிற்கு அருகில் டான் நதியை ருஷ்யர்கள் பிடித்துள்ளனர்.

கலினின், பிரியவ், பிரயான்ஸ்க் லெனின்கிராட் முனைகளிலும் சண்டை நடக்கிறது.

பின்லாந்துக் கடலில் 16,000 டன் எதிரி கப்பலும் பாரென்டெஸ் கடலில் 10,000 டன்னுள்ள மற்றொரு எதிரிக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது.

**எகிப்து.**—ஆசின்லக்கின் சமீபத் தாக்குதலின் பயனாக எதிரிகள் நிலச் சுரங்க வெடிகளைப் பாவிக்கொண்டிருக்கிறார்கள். பிரிடிஷ்காரர்கள் அவைகளை எடுத்து வருகின்றனர். குறுகிய இடத்தில் ரோமலை அடக்கிய போதிலும் தற்காப்பு செய்து கொள்ளுவதற்கும், எதிரிக்குச் சாதகமாக இருக்கிறது. அங்கே சில டாங்கி களையும் பீரங்கிகளையும் வைத்திருக்கிறான். இவ்வாரத்தில் எல்லாப்பகுதிகளிலும் சண்டை நிகழ்ந்தது. வடக்கே டெல்எலீஸா, எல்மகாட், மெஹிரியாவும், மத்தியில் ருவிஸெட்விலும், டேவிரல்ஷீனிலும், தெற்கில் ஜெபல்கலாக், எல்டாகா விலும் சண்டை நடந்தது. ஒரு வாரத்திற்கு முன்னிருந்த நிலைகளுக்குப் பிரிடிஷ் படைகள் பின்வாங்கின. மற்றபடி ஒரு மாறுதலும் இல்லை.

ஸீவா வெளிகளில் ஜொரபப்பை இதாலியர் ஆக்கிரமித்துக் கொண்டனர்.

மெர்ஸாமெட்ரு, எல்டாபா, டொப்ருக் இங்கே பிரிடிஷ் விமானங்கள் தாக்கின.

**சைனு.**—மேற்கு செகியாங்கில் பிங்டேஙய ஸீனர்கள் திரும்பப் பிடித்து லின்ச்வானை (Linchwan)த் தாக்கினார்கள். செகியாங்-கியாங்ஸி இருப்புப்பாதை

20 முதல் 50 மைல்வரை திறக்கப்பட்டது. குவான்டங், குவேகி, இன்டன் இவைகள் ஒரே சமயத்தில் தாக்கப்பட்டன. மேற்கு செகியாங்கில் ஜப்பானியர் பின்வாங்கி ஓடுகின்றனர். ஆனால் ஹுபேயில் (Hupeh) டபுன்கான் மலையில் சீனர்களைத் தாக்கிவருகின்றனர்.

**பர்மா.**—ஜுலை 23, 24 தேதிகளில் சிந்துவின் நதிக்கரையிலுள்ள கலீவாவும், ஸிங்குலாங்கும் தாக்கப்பட்டன. ஜுலை 27வ மத்திய பர்மாவில் ரயில்வே, நதி, ரஸ்தா முதலியவைகளில் போக்குவரவு தாக்கப்பட்டது. மாண்டலே ரெங்கூன் ரயில்வேயில் தாஷியில் (Thazi) இஞ்ஜின் ஷெட்டும், சாமான் வண்டிகளும் தாக்கப்பட்டன. மியிட்கியில் ரயில்வே ஒர்க்ஷாப்பும், மாண்டலேயில் சாமான் வண்டி தளமும் தாக்கப்பட்டன. அதே தினத்தில் அக்யாப்பில் மத்திய கப்பல் துறையும் தாக்கப்பட்டது.

ஏற்கனவேயே 'பொதுக்ஷேமத்தின் கொடுமைகள் பர்மாவில் உண்டாகி விட்டன. சாதாரண காலங்களில் உள்நாட்டுத் தேவைபோக வருஷம் 30,00,000 டன் அரிசி ஏற்றுமதிசெய்யப்படும். ஆனால் தற்சமயத்தில் எல்லா கிராமங்களிலும் வேலை நடத்தவேண்டும். கூலி செய்து வரி விகிதங்களைக் கொடுக்கவேண்டும். பர்மியா நாணயம் ஜப்பானிய நாணயமாக மாற்றப்பட்டுள்ளது. ஜப்பானிய ஆட்சி ஆரம்பமாயிற்று. மோல்மீனில் மாத்திரம் 700 ஜப்பானியர்கள் வந்திருக்கின்றனர். பர்மிய வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும் பதவி இழந்தனர். பர்மியருக்கும், ஜப்பானியருக்கும் சண்டை நடக்கிறது.

**பஸிபிக்.—பிலிப்பைன்ஸ்** மீண்டும் எதிர்க்கிறது. சில அமெரிக்கப் படைகள் மிஞ்சியிருக்கின்றன. மோரோ ஜாதியினர் சண்டை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். லூஸானிலும், மின்டானோவோவிலும் கொரில்லாச் சண்டை நடக்கிறது.

டிமோரில் நேசதேச விமானப்படை எதிரியின் சேனைத் தளங்களைத் தாக்கியது. கோனோ (நியூ கினி)யில் ஸ்டோர்கள், கப்பல்கள் முதலியன தாக்கப்பட்டன. கோபாங், லேயி, அலெயியா, பூகா, லோஹானு முதலியன தாக்கப்பட்டன. கிஸ்கா, பூகாவிற்கு இடையிலுள்ள இடமும் தாக்கப்பட்டது. கோனுவில் மூன்று ஜப்பானியப் போக்குவரத்துக் கப்பல்கள் அமுக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய கிழக்குக் கரையில் டௌன்ஸ்வில்லி, மோர்ஸ்பி, டார்வின், மூபோ முதலியவைகளையும் எதிரி தாக்கினான். சேதம் அதிகமில்லை.

கிஸ்காவில் ஆறு வாரங்களுக்கு முன் இறங்கிய ஜப்பானியப்படை தளத்தை ஏற்படுத்திக்கொள்ளப் பார்க்கிறது. டச்சுத் துறைமுகத்திலுள்ள அமெரிக்க விமானங்கள் அதைத் தாக்கின.

இவ்வாரத்தில் ஒரு ஜப்பானிய நாசகாரியும், 4 மற்ற கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

**விமானப் படையெடுப்புகள்.**—இவ்வாரத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்ஸ், ஹாலந்து, ரூர், ரைன்லாந்து, டேயிஸ்பர்க், மானர்ஹீம், பிராஸ்பர்ட், லூயி, ஹாம்பர்க் முதலியவை பிரிடிஷ் விமானப்படையால் தாக்கப்பட்டன.

கோனிக்ஸ்பர்கை ருஷ்ய விமானப்படைத் தாக்கியது.

எதிரி இங்கிலாந்தில் மிட்லாந்து, கிழக்கு பாகம், பர்மிங்ஹாம் முதலியவைகளை தாக்கினான்.

**அட்லாண்டிக் யுத்தம்.**—வட அட்லாண்டிக்கில் நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. ஆனால் தெற்கில் அப்படி இல்லை. அமெரிக்கா, கனடா, இவைகளின் கிழக்குக் பக்கத்தில் அவ்வளவு அதிகமான கப்பல் நஷ்டமில்லை. துணைக்கப்பல் ஏற்பாடு அப்படி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கரிபியன், மெக்ஸிகோ குடா இவைகே நிலைமை மோசமாக இருக்கிறது. எதிரி யூ படகுகளைப் பலவிதத்தில்

தாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. துணைக்கப்பல்களை தங்களைக் காத்துக் கொள்ளும். பிரிடிஷ் விமானப்படையும், கடற்கரைப்படையும் ஜெர்மன் பாக்வுல்களைக் காட்டிலும் அதிக தீவிரமாய் சண்டை செய்யும்.

**பலவகைப்பட்டவை.**—1. பிரிடன், ருஷ்யா, சைனா செய்துகொண்ட குத்தகைக்கடன் மசோதாவைக் காட்டிலும் பெரிய உடன் படிக்கையை ஜூலை 24உ யூகோஸ்லாவியாவும் அமெரிக்காவும் செய்து கொண்டன. யுத்த காலத்திலும், பிறகும் உதவியளிக்கப்படும். யூகேஸ்லாவியா மன்னரான பீடரும், ரூஸ்வெல்ட்டும் பின் கண்ட அறிக்கையை விடுவித்திருக்கின்றனர்:—"மிஹலாடாவும் அவனது தரைப்படையினரும் அடைந்த லாபங்களைப்போல் வெற்றியை முன்னிட்டு தானாகவே முன்வந்து எதிரியைத் தோற்கடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது."

2. நார்வே கலகக்காரர்களைக் கைதி செய்யச்சென்ற இரண்டு ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டதால் டெலவாக் என்ற கிராமமே அழிக்கப்பட்டது. 120 மனிதர்கள் வெளியேற்றப்பட்டனர். 79 வீடுகள் கொளுத்தப்பட்டன. 150 ஸ்திரீகள் அடைக்கப்பட்டனர். எல்லாக் குழந்தைகளும் சீர்திருத்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டனர்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **20—7—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **நாலு விமான மிறங்கும் இடங்கள்**— பூகா (Fuka). | பெருந் தீக்கள் கிளம்பின. | | **30 விமானங்கள் சேதமாயின.** |
| | **விமானச் சண்டைகள்**—போர்முனையில். | | | **இன்னும் ஒரு விமானம் சேதமாயிற்று.** |
| | **விரோதிப் படகுகள்**—ஸிடிபரானி (Sidibarrani)க்கு வடகிழக்கில். | | | |
| | **டாங்கிகள், விமானங்கள், வண்டிகள்**—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்**—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | **ராணுவக் கட்டடங்கள்**—அக்கியாப் (Akyab). | | | |
| | **சிறு நீராவிக் கப்பல்கள்**—கியாக்பியூ (Kyaukpau) | | | |
| | **சைனா (China)**—பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **ஜப்பானியக் கப்பல்கள்**—பூச்சௌ (Foochow)வுக் கருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிட்டிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**21—7—42.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிட்டிஷ் விமானங்களால்).

சாயந்திரம்.—விரோதித் துருப்புகள், போக்குவரத்து, கடற்கரையோர ஜில்லாக்களில் பீரங்கி ஸ்தானங்கள்—ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

லக்ஷியங்கள்—வடமேற்கு ஜெர்மனி (Germany).

இரவில்.—ராணுவ லக்ஷியங்கள்—ரூர் (Ruhr) பிரதேசத்தில் டூயிஸ்பர்க் (Duisberg) உள்பட.

வேவுபார்த்தல்—பிரான்ஸிலு(France)ம், பெல்ஜியத்தி (Belgium)லுமுள்ள எதிரி விமான நிலயங்களில்.

**லிபியா (Libya)**—(பிரிட்டிஷ் விமானங்களால்).

சுமார் 1,000 வண்டிகள் அடங்கிய கட்டடம்—லிபியா (Libya)வில் மத்தியப் போர்முனையில்.

வேவுபார்த்தல்—ஸிடிபராணி (Sidibarrani).

**கிரீட் (Crete)**—(பிரிட்டிஷ் விமானங்களால்).

விரோதிக் கப்பல்கள்—ஸுடா(Suda)க்குடாவில். — ஒரு பெரிய கப்பல் தாக்குண்டது.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

விமானப் போர்கள்—கிழக்குப் போர் முனை எங்கும்.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).

நதிக் கரையோரம் செல்லும் படகு—(அக்கியாப் பிரதேசத்தில்) கலாடின் (Kaladin) நதியில்.

கட்டடங்களும், கப்பற்சாக்கு இறக்குமிடம்—கியாக்பாயு (Kyaukpau), கலேவா (Kalewa), சின்ட்வின் (Chindwin) நதிக்கரையில். — நஷ்டமில்லை.

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**-(அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்களால்).

பூனு (Buna).

**22—7—42.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிட்டிஷ் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**லிபியா (Libya)**—(பிரிட்டிஷ் விமானங்களால்).

விரோதி டாங்கிகள், மோட்டார் போக்குவரத்து—யுத்தப் பிரதேசத்தில்—டோப்ருக் (Tobruk).

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 22—7—42. (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)** (ஜெர்மன் விமானங்களால்)—தொடர்ச்சி. | | | |
| | விமான மிறங்குமிடங்கள்—ஸொலூம் (Sollum), பூகா (Fuka), கஸாலா (Gazala), மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh). | | | |
| | வந்திறங்கும் துருப்புகள்—யுத்தப் பிரதேசத்தில். | | 12 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள்—கிழக்குப் போர் முனையில். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | நதியில் செல்லும் படகு—அரக்கான் (Arakan) கடற்கரைப் பிரதேசத்தில். | | | |
| | நீராவிக்கப்பல்—கலாடின் (Kaladin) நதிக்கரையில். | | | |
| | இரண்டு கப்பல்கள்—மாயூ (Mayu) நதியில். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி சைனிய வாசஸ்தலம்—டிமோர் (Timor). | | | |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதியின் சாமான்கள் வைக்குமிடங்களும், கட்டடங்களும்—கோனு-பூனு (Gona-Buna) பிரதேசத்தில். | | | |
| | சிறு விரோதிக்கப்பல்—ஸலாமூவா (Salamaua)வுக்கு அருகாமையில். | | | |
| 23—7—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில் -விரோதித் துருப்புகள், பீரங்கி ஸ்தானங்கள், ரஸ்தாப்பாதை, இருப்புப் பாதை, சமுத்திரப் போக்குவரத்து—ஆக்கிரமித்த பிரான்ஸிலு (France)ம், ஹாலந்திலும், பெல்ஜியத்திலும் (Lowcountries) உள்ள கடற்கரை ஜில்லாக்கள். | | | |
| | விமான நிலயம் தரையிலுள்ள விமானங்கள்.—லானியான் (Lannion). | | 7 விமானங்கள். | 1 விமானம். |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland). | பெருந்தீக்கள் கிளம்பின. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 23—7—42. | (வியாழக்கிழமை).—தொடர்ச்சி. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகத்திலுள்ள கட்டடங்கள், யுத்த தளவாடங்கள் ஏற்றிய கப்பல்கள்.—மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh) துறைமுகத்தில். | | | |
| | விமானமிறங்கும் இடங்கள்.—எல்டாபா (Eldaba). | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள், மருந்துகிடங்குகள்.—டொப்ரூக் (Tobruk). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள்.—கிழக்குப் போர் முனையில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிப் படகுகள், யுத்தப்பொருள் சேமிக்குமிடங்கள் கட்டடங்கள்.—கோனு (Gona)வுக் கருகாமையில். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி தளம்.—கலேவா (Kalewa). | | | |
| 24—7—42. | (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஜெர்மன் துருப்புகள், பீரங்கிகள் தளங்கள், சாமான் ஏற்றிய வண்டிகள் இன்னும் மற்ற லக்ஷியங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | | 2 விமானங்கள். | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான மிறங்குமிடங்கள்.—எல்டாபா (Eldaba). | 20 விமானங்கள் சேதமாயின. | | 5 விமானங்கள். |
| | விரோதி வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **ஐயோனியன் கடல் (Ionian Sea)**—(அமெரிக்க பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஒரு வியாபாரக் கப்பல்.—ஐயோனியன் (Ionian Sea) கடல். | மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்.—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி ஸப்ளைகள், விரோதி ஸ்தானங்கள்.—கோனு (Gona). | | 1 விமானம். | 2 விமானங்கள். |
| | விமான நிலயம்.—லே (Lae). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ராபால் (Rabaul). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 25—7—42. (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்—மான்ஹீம் (Mannheim), பாங்க்பர்ட் (Frank Furt). | | | |
| | ரசாயன சாலை.—ஸ்லூஸ் (Sluis), ஹாலந்தில். | | | |
| | விமான எதிர்ப்புகள்.—பெல்ஜியத் (Belgium)தில். | | 4 விமானங்கள். | |
| | இரவில்.—நதியில் பெரிய துறைமுகம்—டூயிஸ்பர்க் (Duisberg). | | | |
| | விமான நிலயங்கள்.–ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | | |
| | இருப்புப் பாதைகள், மற்ற லக்ஷியங்கள்.—ஆக்கிரமித்த பிரான்ஸி (France)ல் | | | |
| | சுரங்கவெடி போடுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **கோனிக்ஸ் பர்க் (Konigs Burg)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—டொப்ரூக் (Tobruk). | | | |
| | படகுகள்.—மெர்ஸா மாட்ரூ (Mersa-Matruh). | | | |
| | விரோதி வண்டிகள், கவசம் பூண்ட வண்டிகள்.—யுத்தப் பிரதேசத்தில். | | | |
| | **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.—கிரீட்டு (Crete)க் கருகாமையில். | | | |
| | விமான நிலயம்.—ஹெராக்ளியான் (Heraklion). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தப் பிரதேசம் முழுவதிலும். | ஜூலை 18 முதல் 25 வரை. | 137 விமானங்கள். | 299 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு–பர்மா (Burma)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லக்ஷியங்கள்.—ஸிங்காங் (Singaung). | | | |
| 26—7—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—கிராவெலீன்ஸ் (Gravelines)க்கும் அபீவில்லி (Abbeville)க்கும் இடையேயுள்ள பிரெஞ்சுக் கடற்கரை. | | | |
| | 'இ' (E) படகு—கலே (Calais)க்கருகாமையில். | | | |
| | இரவில்.—பெரிய துறைமுகம், நீர்மூழ்கிகள் தங்குவதற்கான கட்டடமும்—ஹாம்பர்க் (Hamburg)கின் மத்திய பிரதேசத்தில். | 1,75,000 டன் எரி குண்டுகள் போடப்பட்டன. | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**26—7—42.** (ஞாயிற்றுக்கிழமை).—தொடர்ச்சி.

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்)—தொடர்ச்சி.

விமான நிலயம்—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries).
சுரங்க வெடி போடுவது—விரோதி சமுத்திரங்களில்.

**கோனிக்ஸ்பர்க் (Konigsburg)**—(ருஷ்ய விமானங்களால்).

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்)

துறைமுகம்—டொப்ருக் (Tobruk).
கப்பல் துறைப் பிரதேசம், ராணுவக் கட்டடங்கள்—மெர்ஸாமாட்ரூ (Mersa Matruh).
விரோதி டாங்கிகள், வண்டிகள் எல் அலமீன் (El Alamein) பிரதேசத்தில்.

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

வீமானப் போர்கள், தரையிலுள்ள விமானங்கள்—போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

ஸலாமுவா (Salamaua), லே (Lae) டிமோர் (Timor).
விமான நிலயம்—தீவில்.

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **21—7—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடனி (Britain)ல் விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |
| **22—7—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—7—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரண்டு இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), மற்ற உள்நாட்டுப் பிரதேசங்களில். | சிலர் கொல்லப் பட்டனர். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 5 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | ருஷ்ய ஸ்தானங்களும், துருப்புகளும்-டான் (Don) நதிக்கரையில். | | | |
| **24—7—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்-இங்கிலாந்தி (England)ன் தெற்குக் கடற்கரையில். | சொற்பச் சேதம். | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 3 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| **25—7—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் தெற்கும், தென்கிழக்குக் கடற்கரைகளிலும். | | 3 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta) | அநேக விமானங்கள் சேதமாயின. | 4 விமானங்கள். | |
| | **ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டவுன்ஸ்வில்லி (Townsville). | | | |
| **26—7—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்குக் கடற்கரை. | | 2 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டார்வின் (Darwin). | சொற்பச் சேதம். | | |

| தேதி.: | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டு போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி: விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| **27—7—42.** (திங்கட்கிழமை.) | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—உள்நாட்டுப் பிரதேசங்கள்—மிட்லண்டு (Midlands). | | | |
| | ஒரு இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglian) கடற்கரை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | **மால்டா** (Malta.) | | 12 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **எகிப்து (Egypt)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | அலெக்ஸாண்ட்ரியா (Alexandria) பிரதேசத்தில். | சொற்பச் சேதம். | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**தேசீய யுத்த முன்னணி: அதிகமாகப் பழங்களையும், காய்கறிகளையும் உண்ணுங்கள்.** இந்த இயக்கமானது மேன்மை தங்கிய வைஸிராயினியால் சமீபத்தில் ஆரம்பிக்கப்படும். ஏற்கனவே உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யவேண்டுமென்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவை இரண்டிற்கும் ஒரேவிதமான லக்ஷியம்தான். பொதுவாக அரிசி, கோதுமை முதலியனதான் உணவுப் பண்டங்களென்றும், அவைகளில்லாவிட்டால் பட்டினி கிடக்கவேண்டியதுதானென்றும் யாவரும் நினைத்திருக்கின்றனர். இது தவருன அபிப்பிராயமாகும். பலத்தை அளிக்கக்கூடிய உணவானது காய்கறிகளும், பழங்களும் கூடச் சேர்ந்திருக்க வேண்டுமென்று அனுபவத்தினுலும், ரஸாயன சாஸ்திர முறையாலும் தெரிந்து கொள்ளலாம். வெறும் தானிய உணவைக்கொண்டு வயிற்றை மாத்திரம் நிரப்பிக் கொள்ளலாம். மாமிச ஆகாரம் உண்போருக்குத் தானிய ஆகாரம் அதிகமாகச் செல்லாது. மாமிசம் சாப்பிடுபவர்களுக்குக் காய்கறிகள் முக்கியமான உணவு ஆகும்.

இவ்விதம் நான் சொல்வதானது மனோபிராமமாகச் சொல்லும் வார்த்தைகள் அல்ல. யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் முக்கியத் தேவையான அம்சமாகும். சைனியங்களும், இதர குடிமக்களும் உணவின்றி இருக்க முடியாது. யுத்த காலத்தில் ஆயுதத் தேவையைப்போல் உணவும், அத்தியவசியமானது. சைனியங்கள் பட்டினிகிடக்கும் சந்தர்ப்பம் நேரிட்டால், பொதுமக்களும் பட்டினிகிடக்க நேரிடும். ஆயுதங்களைத் தயாராக வைத்திருந்த போதிலும் உணவுத் தட்டால், ஜெர்மன் சைனியங்கள் அவஸ்தைப்படுவதை நீங்கள் காண்பீர்கள். பொதுமக்களுக்கு உணவு கிடைத்தால்தான் தைரியத்துடன் இருப்பார்கள். ஆத்மா, மனது முதலிய விஷயங்களைக் கவனிக்க வேண்டுமானல் திடமான காத்திரம் வேண்டும்.

கிரமமாக இந்தியாவிலுள்ள ஏழை, பணக்காரர், மேல்வகுப்பு, கீழ் வகுப்பு யாவருக்கும் இது தேவையான இயக்கமாகும். மிகவும் சுலபமானது.

ஆனல் முக்கியமானது. ஏனென்ருல் சிரமமான இந்நிலைகளில் எந்த இடத்திலும் உணவுத் தட்டு ஏற்படலாம். அவரவர்களுக்குப் போதுமானபடி பொருளாதாரம் இணைக்கப்பட்டிருந்தால்தான் கவலையில்லாத வாழ்க்கை ஏற்படும்.

இந்த அபிப்பிராயமானது இந்தியர்களின் பழக்கத்துக்குப் புதிதல்ல. ஆனல் நகரவாசிகள் ஏற்கனவேயுள்ள பல தொந்தரவுகளுக்கு இடையில் இந்த இயக்கத்தை அனுவசியம் என்று கருதலாம். இந்தியா கிராமங்களடங்கிய நாடாகும். கிராமவாசிகள் இவ்விஷயத்தைத் தீவிரமாக எடுத்துக்கொண்டால், இவ்வியக்கம் நிச்சயம் வெற்றிபெறும். இவர்களுடன் நகரவாசிகளும் சேர்ந்து கொண்டால் அவர்களுக்குத்தான் சாதகம்.

'ஏன் காய்கறிகளை கடைகளில் வாங்கிவிடலாமே', 'எனக்குத் தோட்டம் போடத் தெரியாதே', 'எனக்குத் தோட்டம் ஜலம் முதலிய வசதி இல்லையே', என்று பலவாருக நகரவாசிகள் சொல்லுகிருர்கள். இவர்கள் யாவரும் வேலையில் சிரத்தைக் குறைவானவர்கள்.

ஒரு வீடு என்று இருந்தால் தண்ணீர் அவசியமிருக்கும். சமயலறையிலி ருந்தும், ஸ்நான அறையிலிருந்தும் நிச்சயம் தண்ணீர் வெளியே ஓடுகிறது. இதைத் தவிர வீட்டிற்கருகாமையில், கொல்லை ஒவ்வொரு வீட்டிலுமிருக்கிறது. ஆகவே இவைகளைப் பயன்படுத்திக்கொண்டால் காயகறிகள் தாராளமாகக் கிடைக் கும். நாமே பரிசிரமப்பட்டு இளம் காய்கறிகளை தினசரி பரித்துத் தின்னலாம். இரண்டு மூன்று நாள் கழித்ததும், திறந்த வெளியில் கொண்டுவரப்பட்டதும், பரிசுத்தமில்லாததான காய்கறிகளைத் தின்னவேண்டிய அவசியமிருது. அசிரத் தையான காரணங்களைச் சொல்லவேண்டாம். நாம் ஒருவன் சும்மாயிருந்தால் என்ன, மற்ெருருவன் தயாரிக்கட்டும் என்றும் சொல்லவேண்டாம். சிறுதுளி பெருவெள்ளமாகும்.

வி வி வி வி வி வி வி

**ருஷ்யா: ஒரு தனிச் சண்டையில் தோற்றதினுல் யுத்தத்தில் தோல்வியுற்றதாக ஆகாது.**

ரோஸ்டவ் எதிரிவசமாயிற்று. ஆனல் வாரனேஷ் எதிர்த்து நிற்கிறது. 'நிலைமை பயங்கரமானது' 'ஆழ்ந்து கவனிக்க வேண்டியதாயிருக்கிறது', 'அபாயமானது', 'நெருக்கடியானது' முதலிய வார்த்தைகள் நேசநாட்டு அறிக்கைகளில் கிரமமாகக் காணப்பட்டாலும், பிரதேசத்திலிருக்கும் நிலைமையை சரியானபடித் தெரியப்படுத்துகின்றன. இவ்வார்த்தைகள் வாசகர்களை எச்சரிக்கை செய்வதோடு ஒரு தனிப் பிரதேசத்தில் நடக்கும் நிலைமையைத்தான் தெரிவிக்கிறது. ரோஸ்டவ் விழுந்துவிட்டது. ஆனல் ருஷ்யாவே விழுந்துவிட்டதாக ஆகாது. ருஷ்யா என்று சொன்னல் பூரா யுத்தரங்கத்தையும் குறிப்பதாக ஆகாது. நாம் வீணுகப் பயப்படவேண்டாம் தனியாகச் சொல்லப்படும் கதைகளெல்லாம் நமக்குக் கலக்கத்தைச் செய்யும். உண்மை சம்பவங்களை மாத்திரம் நாம் தெரிந்துகொண்டால் போதுமானது.

வி வி வி வி வி வி வி

**ரோஸ்டவ் விழுந்ததால் யுத்தத்தின் காலவரை குறைந்ததே தவிர யுத்தத்தின் போக்கு மாறவில்லை.**

இவ்வித அபிப்பிராயத்தை ஒட்டி வியாழக்கிழமை மிஸ்ட்டர் ஈடன் சொல்லும் பொழுது ருஷ்ய யுத்தமும், எகிப்து யுத்தமும் யுத்தத்தின் காலவரையை மாற்றலாம். போக்கை மாற்ற முடியாது. நமக்கு ஏழு வருஷ யுத்தம், நூறு வருஷ யுத்தம் முதலிய அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தெய்வாதீனமாக இந்த யுத்தம் சீக்கிரத்தில் முடிந்தால் நலம்தான். காரணங்கள் சரியாக இருந்து மனுஷ ஸ்வதந்திரமும், கௌரவமும் போகும்போலிருந்தால் ரோஸ்டவ்வாக இருந்தால்தான் என்ன, இதைப்போல் எவ்வளவோ நகரங்களாக இருந்தால்தான் ஏன்ன? இவைகளால் ஒன்றையும் தீர்மானிக்க முடியாது.

**நேசமும், ஐக்கியமும்.** நேசநாடுகள் என்றிருந்ததை ஐக்கிய நாடுகள் என்று மாற்றப்பட்டிருக்கிறது. இதன் கருத்து ஜெர்மனிக்கு எதிரியாயுள்ள நாடுகள் ஒற்றுமைப்பட்டிருப்பதைத் தெரியப்படுத்துகிறது. இந்நாடுகளெல்லாம் பொதுவான சம்பந்தத்துடனும் யுத்த தந்திரத்துடனும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இப்படி ஒன்று சேர்ந்த நாடுகளில், 'ஒன்றுக்கு விரோதமாக நடந்துகொண்டாலும் எல்லா நாடுகளுக்கும் விரோதமாக நடந்துகொண்டமாதிரிதான்'.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் கிளம்பிய மொழிகள்.** இவ்வாரத்தில் அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் அதிகார வர்க்கத்தினர்கள் ஒரேவிதமான அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கின்றனர். அதாவது, வெற்றியடையவேண்டுமென்பதே. எதிரியைஎதிர்க்கமுன்னேரும்படி 'தேசாபிமானமுள்ள யாவரையும் அழைக்கிரேம். 13 மாதங்களாக நடக்கும் இந்த ருஷ்ய யுத்தத்தில் நினைக்கமுடியாதபடி 1,000 தீரச்செயல்கள் செய்யப்படுகின்றன. தேசாபிமான உணர்ச்சி இன்னும் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. அதை வெளிப்படையாகக் காட்ட தேசத்தின் க்ஷேமத்தை முன்னிட்டு யாவரும் காரியாம்சையில் ஈடுபடவேண்டும். இது தேசாபிமானமுள்ளோருக்கு நன்கு தெரியும். எதிரி எப்படியாவது தடுக்கப்படுவான்'. இது ருஷ்யாவிலிருந்து ஸ்டாலின் சொன்னது.

"தாற்காலிகமான தோல்வியோ, பின்வாங்குவதோ, எதிரியை எதிர்த்துச் சண்டைசெய்யும் நமது தீர்மானத்தைக் குலைக்கமுடியாது. எதிரிகள் யாவரும் நிராயுதபாணிகளாக ஆகி, சக்தியில்லாமல் போகும்வரை நமது தீர்மானம் குறையாது.

இந்த யுத்தம் நீண்டகாலம் நடந்தாலும் சரி, சிறிதளவு நடந்தாலும் சரி, வெற்றிவரையில் முன்னிற்கும் என்று எதிரிகள் நிச்சயம் செய்துகொள்ளலாம்".

இது பிரிடனிலிருந்து ஈடன் சொல்லியது:—

"தாற்காலிகமாயுள்ள தோல்விகளைப்பற்றி பயப்படுவதற்குக் காரணமில்லை. ஆனல் உண்மையான சிப்பாயும், தேசாபிமானிகளும் எதிரியின் பலாத்காரத்திற்கு இணங்காதபடி அதிக பலமாக எதிரியை எதிர்த்தடிக்கக் காரணமாக வைத்துக்கொள்ளவேண்டும்."

"நமது வீர நேசதேசத்தினருக்கு எல்லா உதவியையும் அனுப்புகிரேம். எதிரி எந்தப் பாகத்திலிருந்தாலும் அவனைத் தாக்கித் தோற்கடிப்போம்". இது அமெரிக்காவிலிருந்து வெல்ஸ் சொல்லியது.

ருஷ்ய யுத்த தந்திரமென்பது கம்பீரமானதாயும், லகுவானதாயும் காணப்படுகிறது. ஜெர்மன் சைனியம் பல வருஷங்களாகத் தயாரிக்கப்பட்டுவந்ததால் பலமுள்ளதாகவே இருக்கிறது என்றும், ஆனல் அதன் பூரண பலத்தையும் அடைந்துவிட்டதென்றும் ருஷ்ய நிபுணர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்கள். ஆகவே அது இனிமேல் விருத்தியடையமுடியாதென்றும், நவீன போக்குவரத்து சாதனங்களால் குறித்த இடத்தில் அதிகமாகச் சேகரிக்கமுடிகிறதென்றும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் ருஷ்யச் சைனியம், ஜெர்மன் சைனியத்திற்குச் சமமாக இல்லாதிருந்து வரவரத்தான் பலம் பெற்றுவருகிறது. இருந்தாலும் பூரண பலத்தை அடையவில்லை. அதனல்தான் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் முடியவில்லை. மீண்டும் எதிரியின் அதிக நடமாட்டம் எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும், ருஷ்யச் சைனியம் கலைபடாமல் காத்துக்கொண்டிருந்து, குறுக்கெதிர்ப்புகளைச் செய்யத் தயாராகிவருகிறது. டிமோஷன்கோவின் திட்டம் என்னவென்ருல், ஒரு நகரம் காலி செய்யப்பட்டாலும், ஒரு பிரதேசத்தை விட்டுக்கொடுத்தாலும், எதிரியின் சைனியத்தை அழிக்க வேண்டும் என்பதுதான். மேலும் வாரனேஷ் போன்ற முக்கிய ஸ்தானங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு எதிரியைக் களைக்கச் செய்வதும் ஒரு தந்திரம்தான்.

இவ்விதமாக எதிரியை முடிவாகத் தோற்கடிப்பது லக்ஷியம். இந்த தந்திரம் ஆடம்பரமுள்ளதாகக் காணப்படாதபோதிலும் வெற்றி நிச்சயம் கிடைக்கும். இந்தத் தந்திரத்தினுல்தான் 19-வது நூற்ருண்டில் நெபோலியனும், கடந்த யுத்தத்தில் கெய்ஸரும், சென்ற வருஷத்தில் ஹிட்லரும் தோற்கடிக்கப்பட்டார்கள். சென்ற மாரிகாலத்தில் ரோஸ்டவுக்கு அருகில் வந்ததும் நாஸிகள் பின்வாங்க வேண்டிவந்ததைக் குறிப்பிடுகிறேம்.

வி வி வி வி வி வி வி

**யூரல் மலைச்சாரல்.** டான், டானட்ஸ் பிரதேசங்கள் எதிரி வச மாவதால் நிலைமை மோசமாகி வந்தாலும் யூரல்ஸைக்கொண்டு சமாளித்து விடலாம். தீர்க்க திருஷ்டியுடன் 1930-லேயே ஸ்டாலின் யூரலுக்கு அப்பால் உலோக தளங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னர். இது சாதிக்கப்பட்டது. மாக்னிட்டோகோர்ஸ்க், (Magnitogorsak), ஷெலியாபின்ஸ்க் (Chelyabinsk) போன்ற நகரங்கள் 10 வருஷங்களுக்கு முன் உண்டாகவேயில்லை. தற்போது அந்த இடங்களில் விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள் எல்லாம் உண்டுபண்ணப்படுகின்றன. 1937 முதல் பாக்கு பிரதேசத்திற்கு அடுத்தபடியாக வால்கா—யூரல் எண்ணெய் தளங்கள் உண்டாக்கப்பட்டு 50,00,000 டன்களுக்கு அதிகமாகவே எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்படும் கலப்பு எண்ணெய்யைக் காட்டிலும் அதிகமாக யூரலில் உற்பத்தி செய்யப்படுகிறது. பல வருஷங்கள் வரை இவ்வுற்பத்தி குறையாது.

வி வி வி வி வி வி வி

**1941—1942.** சென்ற வருஷத்தில் லெனின்கிராட், மாஸ்கோ கீவ் போன்ற மூன்று இடங்களில் எதிரி சண்டை செய்தும் இவ்வருஷம் ஒரு பிரதேசத்தில்தான் அவனல் சண்டை செய்ய முடிகிறது. மறுபடி மாரிகாலம் வந்துவிடுமோவென்று ஜெர்மானியர்கள் அவசரப்படும்பொழுது ருஷ்யர்கள் அவர்களைத் தடுக்கிருர்கள. வாரனேஷில் எதிரி நிறுத்தப்பட்டு குறுக்கு எதிர்ப்புகள் செய்யப்பட்டு பின் நோக்கி ஓடும்படியும் செய்யப்பட்டான். வாரனேஷ் எதிர்த்து நிற்கும் வரை ஜெர்மானியருக்குத் தோல்விதான். 1941-ம் வருஷத்திலேயே பூராபலம் கொண்டிருக்கும்பொழுது ஜெர்மனியால் ருஷ்யாவைப் பிடிக்க முடியாததால், 1942-ல் ருஷ்ய பலம் விருத்தியாகும் போது ஜெர்மனியின் பலம் குறையும்பொழுது ருஷ்யாவைப் பிடிக்க முடியவே முடியாது. ருஷ்யச் சைனியத்தைக் கலைத்தால்தான் ஒருக்கால் முடியலாம். ஆனல் அதுவும் முடியாத காரியம். ஒரு வருஷ காலமாகவே ருஷ்யச் சைனியம் கலையவில்லை. ஒருக்கால் ருஷ்யாவே தோற்கடிக்கப்பட்டாலும் யுத்தம் முடிந்து விடாது. நேசநாடுகள் ஒன்று சேர்ந்து யுத்தத்தை நடத்தும். ருஷ்யா படும்பாட்டை வைத்துக்கொண்டு நேசநாடுகள் அதிதீவிரமாகவே சண்டையிடும். ஆகவே ரோஸ்டவ் போய்விட்டதினுல் யுத்தம் முடிந்துவிடவில்லை. இந்தச் சந்தர்ப்பங்களில் முடிவான வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை மெத்த அவசியமானது.

வி வி வி வி வி வி வி

**எகிப்து.** தற்சமயத்தில் எகிப்தின் எல்லையில் அமைதி காணப்படுவதால் இந்த சந்தர்ப்பத்தில் அந்த நிலைமையைப் பரிசீலனை செய்வோம். எல் அலமீன் சண்டை மூன்று வாரங்களாக நடந்து வருகிறது. இரண்டு சைனியங்களும் தங்களது நிலயங்களைப் பலப்படுத்திக்கொண்டு புதிய தாக்குதல்களுக்கு ஏற்பாடு செய்துவருகின்றன. மேமீ 26வ முதல் இரண்டுமாத காலமாக நடந்த சண்டையில் இரு சைனியங்களும் களைத்திருக்கின்றன. ஆனல் சிரமப் பரிகாரம் செய்துகொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. ஆசின்லக்கின் அபிப்பிராயப்படி ரோமல் பள்ளத் தாக்குக்கு அருகில் இருக்கிருன். ரோமலின் நோக்கம் அலெக்ஸாண்டிரியாமீது தான். இவ்வளவு அருகில் வந்ததும் கைக்கு எட்டாதது வாய்க்கு எட்டவில்லையே என்ற கவலை ரோமலுக்கு ஏற்பட்டிருக்கிறது.

கிழக்கே ரோமலின் முன்னணி 20 மைல் டெல் எலீஸாவிற்கும், குவாடரா விற்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. இது கடலுக்கும் மணல் பிரதேசத்திற்கும் மத்தியில் இருக்கிறது. இதில் மூன்று பாகங்களிருக்கின்றன, வடக்கு, மத்தியம், தெற்கு. வடக்கிலும் தெற்கிலுமுள்ள பாகங்கள் கைமாறி மாறி வந்துகொண்டிருந்தாலும் தற்சமயம் பிரிடிஷாரின் கையில் இருக்கிறது. மத்திய பாகத்தில் பிரிடிஷார் ஏழு மைல்கள் முன்னேறியிருக்கின்றனர். பிரிடிஷ் 8-வது படை மறுபடி புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. தந்திரமான நடமாட்டங் களால் ஜெனரல் ஆசின்லக் எதிரியைத் தடுத்துவிடுவார்.

ஆனால் வருங்காலத்தைப்பற்றி ஜோஸியம் சொல்லுவது வீண் பொழுது போக்குதான். ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயம். எகிப்தைப் படையெடுக்கலா மென்று நினைத்து ரோமல் முன்னேறியும் பாதி வழியிலேயே தடுக்கப்பட்டான். ஆனால் ஆரம்பத்திலேயே எகிப்தைப் படையெடுக்க வேண்டுமென்ற யோசனை அவனுக்குக் கிடையாது. கிடைத்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு அதன் பிறகு செய்த யோசனைதான். இதற்காக எல் அலமீனுக்கு, ஆசின்லக் பின் வாங்கியது முன்பு டாரிஸ்விட்ராஸ் அரண்களுக்கு வெல்லிங்டன், நெபோலியன் சண்டையில் பின் வாங்கியதற்குச் சமமாகும். இதனால் பெரியதொரு ஆபத்து தவிர்க்கப்பட்டது. எதிரியின் திட்டம் குலைந்தது. அடுத்தபடி திருப்தியளிக்கும் விஷயம் என்னவென்றால் குறுகலான பாகத்தில் எதிரிகளை அடைத்ததுதான். மேலும் பலம் பெற்றவுடன் எதிரியை எதிர்த்தடிக்கும் சக்தியும் ஆசின்லக்கிற்கு கிடைத்தது. இவ்வித மாறுதல்களால் ரோமல் முன்னேற்றப்போரைத் தற் காப்புப் போராக மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. வெற்றி நிச்சயம் கிடைக்குமென்ற இருமாப்பு இருக்கும் பக்ஷத்தில் ரோமலைப் போன்றவர்கள் ஒரே இடத்தில் நிலைகொள்ளமாட்டார்கள். ஆனால் ஜுலைமீ 10வ ஆசின்லக்தான் முதலில் யுத்தத்தை ஆரம்பித்து டெல் எலீஸாவிலிருந்து 7 மைல் முன்னேறி னான். டைம்ஸ் பத்திரிகையின் கெய்ரோ நிருபர் 'கடந்த சில வாரங்களாக ஜெர்மன் படைகள் நேசதேச விமானங்களிலிருந்து தாக்கப்பட்ட மாதிரி வேறு படைகள் ஒன்றும் தாக்கப்படவில்லை' என்று சொல்லியிருக்கிறார்.

இதற்கிடையில் அச்சுநாட்டு ஒலிபரப்புகள் இஷ்டப்படியான செய்திகளைப் பரப்புகின்றன. அவைகளின் ரேடியோ நிலயங்கள் மத்தியதரைக்கடலுக்கு நாலு பக்கங்களிலும் இருக்கின்றன. எகிப்து, எகிப்தினருக்குச் சொந்தமானது என்பதான வாக்குறுதிகளைச் சொல்லுகின்றனர். அதாவது எகிப்திலிருந்து ஆசின்லக் பின்வாங்கவேண்டுமாம். ரோமலுக்கு இடம் கொடுக்கவேண்டுமாம். சில சமயங்களில் பொய்க்கதைகளையும் கட்டிவருகின்றனர். எகிப்தில், பிரிடிஷ் அட்டூழியங்கள் அதிகம் இருப்பதாயும், அலெக்ஸாண்டிரியாவிலிருந்து போர்ட் ஸெட்டுக்கு எல்லா ஜனங்களும் அனுப்பப்பட்டனரென்றும் சொல்லுகின்றனர். கெய்ரோவைக் காலிசெய்ய வேண்டுமாம். உடனே ராட்டர்டாம், பெல்கிரேட் முதலியவைகளில் நுழைந்த மாதிரி இங்கும் உட்புகுரும் எண்ணம்தான்.

எகிப்தோ, மற்ற மத்தியக்கிழக்கு நாடுகளோ இதற்கு உட்படவில்லை.

1. இராக் பிரிடனுடன் கொண்டுள்ள ஒற்றுமையால் ஸ்வதந்திரத்தைப் பெற்றிருக்கிறது. நேசநாடுகளின் வெற்றிக்குப் பிறகு அராபிய நாடு களின் ஒற்றுமை ஸ்தாபிக்கப்படும். (நூரிஸட், ஜுன் 14).

2. 'எகிப்தில் அச்சுநாட்டு பிரசாரத்தைக்கண்டு பலரும் வியப்படை கின்றனர். எகிப்து பிரதம மந்திரி முதல், கிராமவாசிவரை பிரிடிஷாரின் பேரிலுள்ள நம்பிக்கையில் கொஞ்சமும் மாறுதலில்லை. (நேஷனல் ஜீடங், ஜுலை 13).

3. 'சமீபத்தில் சில வாரங்களாக நடக்கும் சண்டை நிலைமையால் எகிப்து மக்கள் கொஞ்சமும் கலங்கவில்லை. கலவரத்தின் அடையாளமே இல்லை. அரசாங்கமும், பொதுஜனங்களும் பிரிடிஷ் துருப்புகள் போகும்போது வரவேற் கின்றனர். ஆசிமொழிகளைக் கூறுகின்றனர். (தி அல் டாஸ்டர், ஜுலை 8).

4. 'ஆசின்லக்கின் பேரிலுள்ள நம்பிக்கைதான் எங்கும் பரவியிருக்கிறது' (தி அல் பலாக், எகிப்து, ஜுலை 13).

**சைஞ.** கிழக்கு சைஞவிலிருந்த சீனர்களை விரட்டி விட்டதாக ஜப்பானியச் செய்தி ஒன்று வெளியிடுகிறது. சுங்கிங்கிலுள்ள சீனத்துருப்புகளுக்கு ஸப்ளைகள் வராமல் தடைபட்டதினுலும், அடிக்கடி தோல்விகள் ஏற்பட்டுவருவதாலும் அவர்கள் நம்பிக்கை இழந்துவருவதாகவும் சொல்லப்படுகிறது. உண்மையில் இவ் வதந்திகள் யாவும் ஜப்பானின் சூழ்ச்சியினுல்தான் ஏற்பட்டது. உண்மையில் விஷயங்கள் அவ்வாறில்லை. சென்ற ஒன்று இரண்டு வாரங்களாக லிஷுயென், ஸிங்டன் (Sington) என்ற இடங்களையும், சிகியாங்—கியாங்ஸி இருப்புப்பாதை யிலுள்ள அநேக முக்கியமான இடங்களையும் சீனர்கள் திரும்பப் பிடித்துக் கொண்டிருக்கிருர்கள். மேலும் ஜப்பானிய சைனியத்தின் தலைமை ஸ்தானமாகிய வின்ஷான் என்ற இடத்திற்கு 3 மைலுக்கு அருகாமையில் சீனர்கள் முன்னேறி யிருக்கிருர்கள். ஜப்பானியரின் படையெடுப்புக்கு முக்கிய நோக்கம் கியாங்ஸி யின் தலைநகரான நான்சங்கைப்பிடிப்பதுதான். இந்த அவகாசத்திற்குள் ஜப் பானியர் அதை பிடித்துக்கொள்ள முடியவில்லை.

வி வி வி வி வி வி வி

**'1918'.** ஹிட்லருக்குத் தடங்கல்கள் ஒன்றன்பின் ஒன் ருகக் கிளம்புகின்றன. மலைமேல் சஞ்சரிக் கின்றவனுக்கு ஒரு மலைக்கப்பால் மற்ெருரு மலை தோன்றுகிறதுபோல் இருக் கிறது. ஹிட்லர் இவ்வளவையும் ஒவ்வொன்ருகத் தாண்டிச்செல்ல விரும்பு கிருன். ஜெர்மனியின் உள்நாட்டிலும் தொந்தரவுகள் தொடர்ச்சியாகக் கிளம்பி யிருக்கின்றன. முதலில் மத்திய வகுப்பினரை அடக்கிஞன். அதன் மூலம் தொழிலாளர்களின் வகுப்பினரைத் தூக்கிஞன். சண்டையில் ஜயம் என்று அவர்களுக்கு எடுத்துச் சொன்ஞன். ஆனல் சிலரே இந்தத் திட்டங்களால் பிர யோஜனமடைந்தனர். க்ருப்ஸ் போன்ற ஆயுத சாலைகளின் சொந்தக்காரர்களும் தொழிற்சாலை முதலாளிகளும்தான். வியாபாரச் சங்கங்களை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டதால் வேலைக்காரர்களின் ஸ்வதந்திரம் போய்விட்டது.

இருந்தாலும், இரண்டு சத்துருக்கள் ஹிட்லருக்கு இருக்கின்றனர். பொது ஜனங்களும், சைனியமும். '1918-ம் வருஷம் ஹிட்லரின் மனதில் இருக்கிறது. அந்த சமயத்தில் சைனியத்திற்கு விரோதமாக பொதுஜனங்கள் கிளம்பிஞர்கள். கப்பற் படையும் கலகத்தில் சேர்ந்துகொண்டது. ஆகவே ஹிட்லர் தற்சமயத் தில் தனியாக தனக்கு உட்பட்டதொரு சைனியத்தைத் தயாரித்து வருகிருன். இதைக்கொண்டு பொதுஜனங்களையும், சைனியத்தையும் அடக்க உத்தேசம்.

வி வி வி வி வி வி வி

**ஜெர்மனியின் உள்நாட்டு நிலை.** லிபியாவிலும், டான் நதி தீரத்திலும் ஜெர்மானி யர் தாற்காலிகமாக அடைந்துவரும் வெற்றிகள் உண்மை. டாக்டர் கோயபல்ஸை மயக்கிவிட்டது. அவன் வெளி யிடும் டாஸ்ரீச் என்றபத்திரிகையில் அவன் சர்ச்சிலையும், ரூஸ்வெல்ட்டையும் ஒரு தத்துவ ஞானிக்கு ஒப்பிடுகிருன் அந்த சாஸ்திரிகள்தான் சாகும் வரையில் "நான் வரவர குணமடைந்து வருகிறேன்" என்று ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமாக சொல்லிவந்தான். 'நாம் இப்பொழுது அடைந்துவரும் சிறு தோல்வி கள் தோல்விகளேயல்ல. அவைகள் சிறு குழந்தையின் விளையாட்டுக்குத்தான் ஒப்பிடலாம். 'ஜெர்மனியின்' கதி திராசு முனையில் இருக்கிறது', என்று அதே பத் திரிகையில் விவரித்திருக்கிருன். இதேவிதமாக அபிப்பிராயங்களையே மற்ற ஜெர்மன் பத்திரிகைகளும் வெளியிடுகின்றன். டைவெல்ட்வூச் (Die Welt woche) என்ற பத்திரிகையில் பின்வருமாறு கண்டிருக்கிறது:—'ஏன் இந்த யுத்தம்? என்று ஜனங்கள் சென்ற வருஷத்தைவிட இந்த வருஷத்தில் அதிக மாகச் சொல்லிவருகிருர்கள்'. ஆனல் அவ்விதம் அபிப்பிராயப்படுகிறவர்களை ஜெர்மன் ரகசியப் போலீஸ் கடுமையாக அடக்கிவருகிறது. ஹீட்ரிச் இறந்ததைப் பற்றி பாராட்டின 100 ஆஸ்திரியா மக்கள் சுடப்பட்டார்கள். இது ஒரு திருஷ் டாந்தம்தான். மேலும் ஜெர்மனியின் உள்நாட்டில் சமாதானம் என்பதைப் பற்றியே பேசக்கூடாது, என்று டாஸ் ஷிவாரிகார்ப்ஸ் (Das Sch Warze Karps)

பத்திரிகையில் இருந்தது. மேலும் 'ஜெர்மன் மக்கள் சமாதானம் என்பதைப்பற்றி நினைக்கக்கூட கூடாது என்றும், அவர்களுக்கு ஆலோசனை செய்யும் பழக்கத்தையே கொடுக்கக்கூடாது என்று டாக்டர் லி (Dr. Ley) இன்னும் அடாரித்துச் சொல்லுகிருர். ஒரு குழந்தைக்கு கூர்மையான கத்தியோ, நெருப்புக் குச்சியோ, இன்னும் மற்ற ஆபத்து விளையக்கூடிய வஸ்துக்களோ கொடுக்கக்கூடாது. அரசாங்கத்தில் உத்தியோகம்பெற நாஸி கக்ஷியைக் கேட்டுத் தான் ஆகவேண்டும்.

யுத்தத்தினல் பலமக்கள் அழிந்துபோனதால் மட்டில் மற்றும் ஜெர்மன் உள்நாட்டு நிலைமை மோசமாய் போய்விடவில்லை. அதற்கு பல காரணங்களும் உண்டு. 1941-ல் ஜெர்மனி வெற்றியடைந்தால் அதைப்பற்றி ரொம்பவும் பாராட்டப்படும். ஆனல் இப்பொழுது வெற்றிகளை ஜெர்மானியர் அதிகமாகப்பாராட்டுவது கிடையாது. ஏனென்ருல்—ஜெர்மனியின் ஆள்பலம், விவசாயம், போக்குவரத்து முதலியவை க்ஷீணிக்கத் தொடங்கிவிட்டன. வால்டர் டாரி என்பவர் இதற்கு முன் விவசாய இலாகாத் தலைவனுக இருந்தவன். ஜெர்மனியில் இனிமேல் அதிகம் தானிய உற்பத்தி செய்யமுடியாது என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டதினல் அவனுக்குப் பிறகு ஹூபர்ட்பேக் என்பவன் தலைமை வகித்தான். '150 வருஷ காலமாக அடிக்கும் கடும்பனியில் 60 லக்ஷம் ஏக்கர் நிலங்களில் விளையக்கூடிய தானியமும், எண்ணெய் வித்தும் முற்றிலும் அழிந்துபோய்விட்டது. உணவுக்காகவும், வித்துக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த 120 லக்ஷம் டன் நிறையுள்ள உருளைக்கிழங்கும், விதைக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏராளமான தானியமும் சென்ற மாறிகாலத்தில் அழிந்துபோய்விட்டது. சென்ற வருஷத்தில் விளைந்த விளைபொருள்களைக் கொண்டுதான் இப்பொழுது ஜெர்மானியர் சமாளித்து வருகிருர்கள், என்று ஹனேவரில் ஜூன் 27-ல் விவசாயிகள் கூடின கூட்டத்தில் பேசினன். மேலும் அவைகளை வேறு இடங்களுக்கு ஏற்றி அனுப்புவதற்கு சாதனங்கள் மிகவும் குறைவு. 30,000 அல்லது 40,000 சாமான் ஏற்றும் வண்டிகளையும், பல மைல்கள் இருப்புப்பாதை போடுவதற்கு தண்டவாளமும் அனுப்பும்படி ஜெர்மனி விஷி ஸர்க்காரைக் கேட்டிருக்கிறது. ஆனல் விஷி அரசாங்கத்திலும் இதேமாதிரி குறைவு ஏற்பட்டு, அதன் நகரங்களுக்கே உணவுப் பொருள்களை அனுப்ப வசதியில்லாமல் இருக்கிறது.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானியர் கொள்ளையடிப்பது.** ஜப்பான், ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள பொருள்களைக் கொள்ளையடிப்பதைக் காட்டிலும். ஆங்காங்கு அதன் ஜனங்களை குடியேறும்படி பிரசாரம் செய்து வருகிறது. மே மாதத்திலும், ஜூன் மாதத்திலும் டோக்கியோவிலிருந்து வரும் ஒலிபரப்புகளில், ஆசியாவில் ஆக்கிரமித்த நாடுகளில் போய் குடியேறும்படி ஜப்பான் தன் மக்களை வற்புறுத்தி வருகிறதாகச் சொல்லப்படுகிறது. உதாரணமாக, மேமீ 31உ, 'எங்கும் புதுதிட்டத்தை ஸ்தாபிப்பதாயிருந்தால் பதினயிரக் கணக்கான ஜப்பானிய உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்கு அனுப்பப்படவேண்டும்', ஜூன் 9—'தெற்குப் பாகத்திலுள்ள எதிரி நாடுகள் பூராவும் ஆக்கிரமிக்கப் பட்டுவிட்டது. அப்பிரதேசங்களில் ஜப்பானியர் வந்து குடியேறுவார்கள் என்று நாம் நம்புகிரும்'. ஜூன் 22 "கிழக்குத் தீவுகளில் இன்னும் அநேக ஜப்பானியர் வந்து குடியேறி அத்தீவுகளை முன்னேற்றமடையச் செய்வார்கள் என்று ஜப்பானிய அரசாங்கம் எதிர் பார்க்கிறது". 'இப்பிரதேசங்களில் எந்த இடத்திற்கும் குடியேறிச் செல்லுகிறவர்களை அனுப்புவதற்கு ஜப்பான் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு' என்று டோஜோ சொல்லுகிருன்.

தூரக்கிழக்குச் சம்பந்தமாய் 1941-ம்வருஷத்தில் ஜப்பான் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் இதற்குமுன் பலநாடுகளில் குடியேறினவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. கொரியாவில் 191 -ம்வருஷத்தில் 1,70,000 ஜப்பானியர் குடியேறியிருந்தார்கள். 1938-ம்வருஷத்தில் 6,00,000 பேர் மீண்டும் குடியேறி யிருக்கிருர்கள். ஜப்பானியர் குடியேற்றம் பார்மோஸாவிலும்

வரவர அதிகரித்துவருகிறது. 1910-ம்வருஷத்தில் 10,00,000 பேர் ஜப்பானிலிருந்து குடியேறினவர்கள். 1938-ம்வருஷத்தில் 3,00,000 பேர் அதிகமாக உட்புகுந்தனர். அதே போலவே மஞ்சூரியாவிலும் 1932-ம்வருஷத்தில் ஜப்பானிலிருந்து குடியேறியவர்கள் ஒரு லக்ஷம் பேரிலிருந்து 1937-ம்வருஷக்குள் 3 லக்ஷம் பேர்களுக்கு அதிகரித்துவிட்டார்கள். வடகிழக்கு சைனாவில் 1938-ம்வருஷத்தில் 80,000 குடும்பங்கள் குடியேறி 1938--1941-ம் வருஷத்திற்குள் 2,00,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்தை வியாபித்துக் கொண்டனர்.

---

# ஜெர்மனியை அடியோடு அழிப்போம்.

"ஜெர்மன் ரீச்சை அடியோடு அழிப்பதற்கு அவசியமேற்படும்படி நீங்கள் செய்தால் நாங்கள் அழிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய விமானங்கள் பூர்த்தியாக முடிவடைந்து, அமெரிக்க விமான உற்பத்தி இரட்டிப்பு மடங்கோ, மூன்று மடங்கோ ஆனவுடன் நாங்கள் செய்யப்போகும் சண்டையை நீங்கள் பார்த்தால் இதுவரை நடந்தது மிகச்சிறியது என்று தெரியும்.

"ஒரு அமெரிக்கத் தொழிற்சாலையில் மாத்திரம் இரண்டு மணிக்கு ஒரு தடவை நான்கு இஞ்ஜின்களுள்ள விமானங்கள் 4 டன் குண்டுகளை ஏற்றக்கூடியதாகச் செய்யப்பட்டு ஜெர்மனியை நோக்கிப் போகின்றன.

"அமெரிக்காவில் இதைப்போல் எத்தனையோ தொழிற்சாலைகளிருக்கின்றன. ஒவ்வொரு நாளும், நாங்களும் அமெரிக்கர்களும் மேல்மேல் பலமடைந்து வருகிறோம். நீங்களும் முடிந்தவரை இந்த யுத்தத்தையும், படையெடுப்பையும் தவிர்த்துக்கொள்ள முயல வேண்டும். அச்சுநாட்டுத் தலைவர்களை ஒழித்து சமாதானம் செய்து கொள்ளலாம்.

"பிரிடன்பேரில் சில விமானங்களைத்தான் ஜெர்மானியர் அனுப்புகின்றனர். ஜெர்மனியை நாங்கள் மிகக் கடுமையாகத் தாக்கி வருகிறோம். வார்ஸா, பெல்கிரேட், ராட்டர்டாம், லண்டன், பிளேமௌத், கவன்டிரி போன்ற நகரங்களை எதிரி தாக்கியது எங்களுக்கு ஞாபகத்தில் இருந்தாலும் பழிவாங்கும் நோக்கத்துடன் மாத்திரம் நாங்கள் தாக்கவில்லை.

### இன்னும் அதிக நகரங்கள் தாக்கப்படும்.

ஜெர்மனியில் ஒவ்வொரு நகரமாகத் தாக்கும் எண்ணமென்னவென்றால் உங்களுக்கும் யுத்தத்தில் ஒரு பங்கு இருக்கவேண்டுமென்றுதான். மீண்டும் நாங்கள் ஜெர்மன் நகரத்தைத் தாக்கத்தான் போகிறோம்.

"நாஸிகள் உங்களை ஆபத்திற்கு உட்படுத்தட்டும். இஷ்டமிருந்தால் நீங்கள் அதற்கு உட்படுங்கள். இதை நீங்களாகத்தான் தீர்மானித்துக்கொள்ளலாம்.

"ஐரோப்பிய யுத்தத்தில் தற்போதுதான் அமெரிக்கா ஈடுபட்டிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து முதல் விமானப்படை இங்கிலாந்திற்கு வந்து விட்டது.

"இவைகள் ஜெர்மனியைத் தாக்குவதென்றால் என்ன நேருமென்று உங்களுக்குத் தெரியும்.

### உங்கள் தலைவர்கள் வீணாசை பிடித்தவர்கள்.

1940-ல் ஆயுத பலமில்லாத காலத்தில் எங்களைத் தோற்கடிக்க முடியவில்லை. அந்த சமயத்தில் ருஷ்யாவையும், அமெரிக்காவையும், தாக்கும் எண்ணம் கொண்டிருந்தனர். இதாலியைத் தவிர மற்ற உலகம் பூரா இவ்விதம் தான் நினைக்கிறது.

"தற்போது பலமடைந்துவரும் காலத்திலும், ருஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியிருக்கும்போதும், நீங்கள் அசந்துபோன போதும் எவ்விதம் எங்களைத் தோற்கடிக்கமுடியும்"?

# அரசாங்க அறிக்கைகள்.

(அபிடீன் டேவர் எழுதியது).

கார்கவ் பிரதேசத்தில் நடந்த சண்டையில் செஞ்சேனையின் நஷ்டத்தைப் பற்றி ஜெர்மானியர் பின்கண்ட விவரங்களைப் பிரசுரித்தனர்.

20 காலாட்படை பகுதி, 7 குதிரைப்படைப் பகுதி, 14 கவசமணிந்தபடைகளடங்கிய 3 ருஷ்யச் சேனைகள் அழிக்கப்பட்டன. 2,40,000 ருஷ்யர்கள் கைதி செய்யப்பட்டனர். 1,249 டாங்கிகளும், 2,016 பீரங்கிகளும், 518 விமானங்களும் அழிக்கப்பட்டன.

அதே சண்டையில் ஜெர்மன் நஷ்டங்களைப்பற்றி ருஷ்யர்களும் சில விவரங்களைக் கொடுத்திருக்கின்றன.

90,000 ஜெர்மானியர் கைதி செய்யப்பட்டும் கொல்லவும் பட்டனர். 540 டாங்கிகளும், 1,511 பீரங்கிகளும், 200 விமானங்களும் அழிக்கப்பட்டன.

தங்களுடைய நஷ்டத்தைப்பற்றி ருஷ்யர்கள் 5,000 பேர் கொல்லப்பட்டதாயும், 66,000 விவரம் தெரியாமல் போனதாயும், 300 டாங்கிகள், 832 பீரங்கிகள், 124 விமானங்கள் அழிந்ததாயும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இவ்விதம் ஒரு நாளும் ஒத்துவராமல் அரசாங்க அறிக்கைகள் வெளிவருகின்றன. எதிரிகளுக்கு உண்டாக்கிய நஷ்டத்தைப்பற்றி யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள் பலவிதமான விவரங்களைக் கொடுக்கின்றன. ஆனால் எந்த நாடு கொடுக்கும் விவரம் உண்மையானதென்று தெரிந்துகொள்ளவேண்டியதுதான்.

ருஷ்யர்கள் கொடுக்கும் கணக்கில் இறந்த ருஷ்யர்களைப் பற்றியும் விவரம் தெரியாத ருஷ்யர்களைப் பற்றியும் வெவ்வேறு கணக்குகளைக் கொடுத்தாலும், ஜெர்மானியர் பக்கத்தில் நேர்ந்த நஷ்டத்தைப் பற்றி ஒரேவிதமான கணக்கைத்தான் கொடுக்கின்றனர். பெரும் சேனைகள் பலநாள் சண்டை செய்யும்போது சரியானபடி நஷ்டத்தைக் கணக்கிடுவது சிரமமான காரியமாகும். காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிய விவரங்களை எதிரி கண்டுகொள்ள முடியாது. உண்மையைக் கொடுக்கும் நோக்கத்துடனேயே ருஷ்யர்கள் இரண்டுவிதமான விவரங்களையும் கொடுத்திருக்கின்றனர்.

2,40,000 ருஷ்யர்களைக் கைதி செய்ததாக ஜெர்மானியர் சொல்லுகின்றனர். ருஷ்யர்களோ 66,000 பேர்தான் என்று சொல்லுகின்றனர். இருவர் கொடுக்கும் கணக்குகளுக்கு நடுவில் 1,53,000 பேர்களாகிறது. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சராசரிக் கணக்குதான் சரியாகும்.

ஆனால் சரியான உண்மைகளைக் கொடுப்பது பிரிடிஷ் அரசாங்க அறிக்கைகள்தான். உதாரணமாக சமீபத்தில் கோலோன் மீது செய்யப்பட்ட விமானத் தாக்குதலில் தங்களுக்கு 44 விமானங்கள் நஷ்டமென்று பிரிடிஷ்காரர்கள் ஒப்புக்கொண்டனர். ஜெர்மானியர் வீழ்த்தியதாகச் சொன்னது 37 தான். பிரிடிஷாரைப் போல் சரியான விவரங்களை மற்ற எந்த நாடுகளும் கொடுக்கவில்லை. ஜூன் 22உ முதல் ஜெர்மானியரோ, ருஷ்யர்களோ, எதிரியைக் காட்டிலும் தங்களுக்கு அதிகமான விமான நஷ்டம் ஏற்பட்டதை ஒப்புக்கொள்ளவேயில்லை.

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய அறிக்கைகளில் உண்மைகளையே பிரசுரிக்க வேண்டுமென்று நினைத்தனர். ஆனால் சேம்பர்லின் டலாடியருக்கு "எங்களைப்போல் நீங்களும் செய்யாதீர்கள். நஷ்டத்தை மாத்திரம் சொல்லாதீர்கள். பிரிடிஷாரைப் போல் பிரெஞ்சுக்காரர்கள் அமைதியுடனிருக்கமாட்டார்கள். சுலபமாக மனம் தளர்ந்து விடுவார்கள்" என்று இவர் சொன்னது உண்மையென்று கொஞ்சநாள் கழித்தே நமக்குத் தெரியவந்தது. இவ்வருஷம் ஜூன் முதல் தங்களுடைய கப்பல் நஷ்டங்களை

சொல்ல பிரிடிஷார் பிரியப்படவில்லை. எதிரிக்கு இவ்விவரங்கள் தெரியக்கூடா தென்றே இம்மாதிரி செய்யப்பட்டது. இருந்தாலும், கப்பல் இலாகா நஷ்டத்தைக் குறைக்காமல் வெளிவிட்டுக் கொண்டுதானிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் ஜெர்மானியர்கள் தங்களுடைய நீர்மூழ்கிகளின் நஷ்டத்தைச் சொல்லாமல் நேச நாட்டுக்கப்பல் நஷ்டத்தை மாத்திரம் சொல்லிவருகிறார்கள்.

ஆகவே நேசநாட்டு விவரங்கள் உண்மையாக இருப்பதால் அவைகள் நம்பப் படுகின்றனர். இது நேசநாடுகளுக்கு ஒரு சாதகம்தான்.

---

# பிரிடன் பேசுகிறது,

---

## மாக்பெத் நாடகத்தின் கடைசி கட்டம்.

(மிஸ்ட்டர் J. B. பிரீஸ்ட்லி பி. பி. ஸி-யில் பேசியது).

### படுகொலை நடந்த தினம்.

எட்டு வருஷங்களுக்கு முன்னால், அதாவது 1934-ம் வருஷம் ஜூன் மீ 30உ அடால்ப் ஹிட்லர் தன்னுடைய நெருங்கிய சிநேகிதர்களைக் கொலைசெய்து இப்பெரும் பதவியை அடைந்தான். ஜூன் மீ 30உ இரவில் நடந்த சம்பவத்தை யாவரும் மறக்கமுடியாது. எவ்வளவோ நூற்றுக்கணக்கான நாஸித்தலைவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அவர்களில் ஹிட்லர் இப்பதவியையடைய உதவி செய்தவரான காப்டன் ரோயம் (Roehm) என்பவனும் சேர்ந்தவன். நாஸி இயக்கத்தில் ஈடுபட்டிருந்த கொடிய தலைவர்கள் யாவரும் போய்விட்டபடியால், இந்த கலகக்கூட்டம் ஒழிந்தது என்று நாஸிகள் அப்பொழுது சொல்லிவந்தார்கள். ஆனால் இவ்விதம் அகோரமான கொலைகள் ஏற்பட்டபடியால் உண்மையான கலகம் ஏற்பட்டுவிடும் என்றும், எஞ்சியிருக்கும் நாஸி இயக்கத்திற்கு வெகு துரிதத்தில் அழிவு காலம் ஏற்பட்டுவிடும் என்றும் ராஷ்நீக் குறிப்பிட்டுச் சொன்னார். வரவர நாஸி இயக்கத்தில் நல்ல அம்சங்கள் என்பதே இல்லாமல் போய்விட்டன. ஆனால் அது துரோகம், பலாத்காரம், கொடுமை முதலிய இழிவான நடவடிக்கைகளைச் செய்யத்துணிந்த பலமான கோஷ்டியாய் விட்டது. காப்டன் ரோயம் (Roehm) இன்னும் அவனுடைய சகாக்களும் ரொம்ப நல்லவர்கள் என்று சொல்லுவதற்கில்லை. அவர்கள் வெறும் காட்டுமிருண்டிகளே. வெரும் வீராப்பு பேசுகிறவர்களும், மிருகத் தன்மை வாய்ந்தவர்களும்தான். ஆனால் அவர்களைக் கொன்ற மனிதர்களோ இன்னும் மோசமானவர்கள்.

### ஜெர்மன் இளைஞர்களின் மிருகத்தன்மை.

அவர்கள் மட்டில் கொடியவர்களாக இருக்கவில்லை. இன்னும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் கொடிய செய்கைகளைச் செய்யும்படி தூண்டிவந்தார்கள். இவ்விதமாக ஒரு தலைமுறையில் தோன்றின ஜெர்மன் இளைஞர்கள் யாவரும் தூண்டப்பட்டார்கள். அதனால் இந்தக் காலத்தில் திடுக்கிடும் சம்பவங்கள் அநேகம் நடந்திருக்கின்றன. நாம் அவற்றைப்பற்றி அதிகம் பாராட்டாமல் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறோம். அதன் கொடுமையை ஒப்பிட்டுப் பார்க்கிறோம். ஆனால் ஒரு பெரிய தேசத்திலுள்ள வாலிபர்களைப் பகிரங்கமாகவும் வேண்டுமென்றே கெடுத்துவருவதைப் பார்க்க நமக்கு அதிக பயத்தை உண்டாக்குகிறது. 1934-ம் வருஷம் ஜூன் மீ 30உயில் ஹிட்லர், கோயரிங், ஹிம்லர் இன்னும் மற்றவர்கள் அவர்களுடைய பழைய சகாக்களில் எவ்வளவோ நூற்றுக்கணக்கான பேர்களைக் கொலை புரிந்தார்கள். அது முதற்கொண்டு உள்நாட்டில் தோன்றின வாலிபர்களில் தங்களுக்கு அடங்காத அநேகம் பேர்களையும் கொலை செய்தார்கள். அவர் வசம் அகப்பட்டவர்களுக்கு மிகவும் கொடுஞ்செயல்களைப் புரியும்படி கற்றுக்கொடுக்கப்பட்டது. மனித வர்க்கத்தையே மரியாதையின்றி அநாகரீகமாக நடத்தும்படிக்கும், தூண்டப்பட்டார்கள். எவ்வளவு இழிவான காரியமோ அதையும் செய்யத் துணியும்படிக்கும், மேன்மையான உணர்ச்சி

களே இவ்வுலகத்தில் இல்லையென்றும் கற்றுக்கொடுக்கப்பட்டார்கள். நியாயம், பச்சாத்தாபம், அன்பு இவை யாவும் கோழைகளுக்குத்தான் உரித்தானவேயே ஒழிய உயர்ந்தவர்களுக்குக் கிடையாது. ஆனால் துரோகம், மிருகத் தன்மையாக நடந்துகொள்ளுதல், கொடுமை முதலிய குணங்கள் யாவும் உயர்ந்த ஜாதியாருக்கு உண்டு என்று அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. 3,000 வருஷ காலமாக பிரக்யாதிபெற்ற புலவர்கள், போதகர்கள். ஞானிகள் தூரதிருஷ்டியுடனும், சாதுர்யமாகவும் சொல்லிவந்தவைகளெல்லாம் வீண்காலம் கழிப்பதற்கான விஷயங்கள்தான் என்று அவர்களுக்கு உறுதி கூறினார்கள். இவ்விதம் ஞானோபதேசம் செய்து பல லக்ஷக்கணக்கான இளைஞர்களைக் காட்டுமிருண்டிகளாகச் செய்துவிட்டார்கள். மேலும் அவர்களை நாகரீக வாழ்க்கையில் ஈடுபடவிடாமல் செய்துவிட்டார்கள்.

## வெகுதுரிதமாக விரோதிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

இவ்விதம் தயாரிக்கப்பட்ட வாலிபர்கள் குறுகிய நோக்கத்துடனும், படிப்பின்மையுடனும், முரட்டுத்தனமாக தேசங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றிவருகிறார்கள். ஆர்டிக் சமுத்திரத்திலிருந்து மத்தியதரைக் கடல்வரையிலுமுள்ள பிரதேசங்களில் அவர்கள் அட்டூழியங்கள் செய்து வந்ததால் அங்குள்ள அமைதியும், நாணயமும் உள்ளஜனங்களின் விரோதத்தை சம்பாதித்தனர். ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் எந்த தேசத்தில் நாஸிகள் வரவேற்கப்படுகிறார்கள்? பிரான்ஸ் தேசத்தில் ரொம்ப நாஸுக்காகவும், மரியாதையுடனும் நடந்துகொள்ளுவதாக பாவனைசெய்தபோதிலும், அவர்களுக்கு இங்குள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் ஆதரவளித்துவந்தபோதிலும், அவர்களின் முட்டாள்தனத்தால் பிரெஞ்சு மக்களின் கோபத்தை சம்பாதித்துக்கொண்டார்கள். எதைக்கண்டாலும் கைப்பற்றவும், பிணையாளிகளையும், குற்றமற்றவர்களையும் கொலை செய்ய நோக்கங்கொண்டு மிருகத்தன்மையுடன் அவர்கள் நடந்துகொண்டார்கள். அதனால் அவர்கள் சென்ற இடங்களெல்லாம் அவர்களுக்கு விரோதிகள் திரள் திரளாகக் குவிந்தார்கள். உதாரணமாக நாஸிகள் ஒருவரைச் சுட்டால், சுமார் 50 பேர்கள் அவர்களை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொள்ளுகிறார்கள். இனனும் 50 பேர்களைக் கொலை செய்தார்களானால், இன்னும் 2,500 பேர்கள் கடும் விரோதிகளாக மாறிவிடுகிறார்கள். இம்மாதிரி நாஸிகளின் அக்கிரமச் செய்கைகள் விருத்தியாக, விருத்தியாக அவர்களின் விரோதிகளும் பன்மடங்கு அதிகரிக்கின்றனர். இவ்விதமாக ஹிட்லரின் 'புதிய திட்டத்'தில் எங்கும் காவற்கூடமாகவும், கொலைக்களமாகவும் இருந்துவருகிறது.

## காமவெறி.

போலந்திலும், ஸெக்கோஸ்லாவியாவிலும் நாஸிகள் நடந்துகொண்ட மாதிரியுடன் பிரான்ஸில் அவர்கள் நடந்துகொண்டதை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்கள் பிரான்ஸில் நடத்திய கொடுமைகள் யாவும் சிறு குழந்தைகளின் விஷமச் செய்கைகள்தான். ஸெகோஸ்லாவியாவில் லாடிஸி என்னும் கிராமம் பூராவும் தரையோடு தரையாக ஆக்கப்பட்டு, அதன் ஜனங்கள் யாவரும் கொலை செய்யப்பட்டதைப்பற்றிய விவரங்கள் இப்பொழுது வெளிவந்திருக்கின்றன. இதைக்காட்டிலும் இன்னும் அதிகமாக யூகோஸ்லாவியாவில் நடைபெற்றது. எல்லாவற்றையும் அழித்தும், ஜனங்களைக் கூட்டம் கூட்டமாக சேர்த்துக் கொலை செய்தும் வந்தனர். எங்கு கண்டாலும் ஒரே கொலைக்களமாக விளங்கிற்று. ருஷ்யாவில் ஜெர்மனி ஆக்கிரமித்த பிரதேசங்களில் என்ன நடந்ததென்று நமக்குத் தெரியும். அங்குள்ள நாஸிகள் சொத்துக்களைக் கொள்ளையடித்தும், ஸ்திரீகளைக் கற்பழித்தும், இன்னும் ஜனங்களைப் பலவிதமாக ஹிம்சித்தும் வந்தார்கள். போலந்தில் சமீபத்தில் ஏராளமாக ஸ்திரீகள் கொலை செய்யப்பட்டார்கள். இதைத் தவிர கைதிகளின் முகாம்களிலும், கோட்டைகளிலும், இன்னும் மற்ற இடங்களிலும் ரொம்ப அக்கிரமங்கள் நடைபெறுகின்றன. எங்கும் கொலையும், ஹிம்சையும் நடைபெறுகின்றன. குடிவெறியில் காம விகாரத்துடன் கொடிய நாஸிகள் ஸ்திரீகளைக் கற்பழித்து வருகிறார்கள். அவர்கள் செய்யும் அட்டூழியங்களைப்பற்றிய சுருக்கமான விவரங்களைக்கூட படிக்க சகிக்காது. ஆன

மையில் நாம் இந்த நரக வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நம்மளில் அநேகர் கருதுகிறோம். நமக்குள்ளாகவே பிரசாரம் ஒன்று இருப்பதாக முணுமுணுத்துக் கொள்ளுகிறோம். ஆனால் எப்பொழுதாவது உண்மையான நடப்பில் ஏதாவது ஒரு எண்ணிக்கை கூடுதலாக சொல்லப்பட்டிருக்கலாம்; அல்லது ஒரு கைதி முகாமில் நடக்கும் கொடிய செய்கைகள் தவறுதலாக வேறு முகாம்களில் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் இவைகள் நடப்பதில் சந்தேகமே இல்லை. இவற்றைப்பற்றி அதிகமாக்ச் சொன்னால் நமது மூளை குழம்பிவிடும். இப்பொழுது உலகம் எப்படியிருக்கிறதென்றும், ஹிட்லரும், அவன் சகாக்களும் எவ்வளவு தூரம் அவைகளுக்குப் பொறுப்பாளிகள் என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

## துர்க்கதியடைந்தவர்கள்.

இந்த கோரச் செய்கைகளுக்கு ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் சிறைபிடிக்கப்பட்டோ, பட்டினியாகக் கிடக்கும்படி செய்தோ, அடித்தோ, சுட்டுக் கொல்லப்பட்டோ உள்ள ஆண், பெண்கள் மாத்திரம பலியாகவில்லை. இவர்களைச் சுற்றி வளைப்பதற்கும், பட்டினி போட்டு ஹிம்சை செய்வதற்கும், அடிப்பதற்கும், சுடுவதற்கும் அதிகப்படியாகச்செய்வதற்குத் தயாரிக்கபபட்ட வாலிப நாஸிப் படைகளும் இவற்றிற்குப் பலியாக இருக்கிறார்கள். அந்த வாலிபர்களை ஏமாற்றி அழைத்துக் கொண்டுபோய், மயக்கி, பயிற்சி அளித்து, நம்முடைய நாகரீகம் முற்றிலும் இல்லாமல் தயாரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் கொலை செய்கிறவர்களையும், கொலை செய்யப்படுகிறவர்களையும் சேர்க்கவேண்டும். 15 வருஷங்களுக்குமுன் இப்பொழுது ஐரோப்பாவில் சிற்றெறும்புகள்போல் சாரியாய்த் திரியும் வாலிப விஷமிகள் நேர்த்தியான ஜெர்மன் நகரங்களிலும், கிராமங்களிலும் தெருக்களில் காணப்பட்ட செம்பட்டை மயிரும், நீலக் கண்களும், புன்முறுவலும் கொண்ட குழந்தைகளாக இருந்தார்கள். அவர்கள் நாகரீகமாக இருக்கும்படி பயிற்சி அளிக்கப்படாதவர்கள் என்பதில்லை. நாகரீகம் இல்லாமல் இருக்கும்படி வெகு ஜாக்கிரதையாகப் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள். வருங்காலத்தில் அவர்கள் கதி என்ன?

## போலீஸ்காரன்தான்; அரசியல் நிபுணன் அல்ல.

உலகம் பூராவையும் அவர்களால் ஜயிக்கமுடியாது. உலகம் பூராவும் ஜயிக்காமல் போனால் வருங்காலத்தில் அவர்களுக்கு ஒரு கதியும் ஏற்படாது. இன்னும் சில நாடுகளை அவர்கள் ஆக்கிரமிக்கலாம். ஆனால் அவர்கள் ஆக்கிரமிக்கக்கூடுமென்று தோன்றவில்லை. அப்படி அவர்கள் ஆக்கிரமித்தால் இன்னும் அநேகம் பேர்கள் சிறைச்சாலைகள், புதைகுழிகள் நிறைந்த இடங்களில் நீண்ட காலம் சேவகம் புரிய நேரிடும். ஏற்கனவே ஆக்கிரமித்த நாடுகளுடன் அவர்களால் நியாயமான சமாதான நிபந்தனைகள் செய்து கொள்ளமுடியாது. எல்லா இடங்களிலும் அவர்களது நிலைமை அபிவிருத்தியடையவில்லை. ஆனால் எப்பொழுதும் கேவலமாகப் போய்க்கொண்டுவருகிறது. 'பலாத்காரம் மட்டும் தாற்காலிகமாக உபயோகிக்கப்படும். அந்த சமயத்திலதான் ஜனங்களைக் கீழ்படியச் செய்வது போலாகும். ஆனால் பலாத்காரம் மறுபடியும் கீழ்படியச் செய்ய வேண்டிய அவசியத்தை நிவர்த்தித்து விடாது. சதா சர்வகாலமும் ஜயிக்கப்படவேண்டிய தேசத்தாரை ஆண்டுவந்ததாகச் சொல்ல முடியாது' என்று 150 வருஷங்களுக்குமுன் பர்க் என்பவர் சொல்லியிருக்கிறார். அப்படியே நாஸிகளும் ஐரோப்பாவை ஆண்டு வருவதுபோல் காணப்பட்டாலும் நடைமுறையில் ஒருபொழுதும் அவர்கள் அரசாக்ஷியில் ஈடுபடவில்லை. அவர்களின் வேலை போலீஸ்காரன் வேலையாக இருக்கிறதே தவிர அரசியல் நிபுணன் வேலையாக இல்லை. மேலும் கௌரவமாகவும் உண்மையான போலீஸ்காரனைப்போல் நீதிமன்றத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும், அமைதி ஏற்படுத்துவதற்காகவும் வேலை பார்த்து வரும் போலீஸ்காரனுடைய வேலையைப் போல் அவர்கள் வேலையில்லை. அவர்கள் வேலையோ கொள்ளைக்கூட்டத்தாரின் ஆக்ஷியைப்போல் இருக்கிறது. எப்பொழும் அவர்களைச் சுற்றியுள்ள ஜனங்களுக்கு அவர்கள் மேல் அதிகரித்துவரும் வெறுப்பானது, அவர்கள் இருப்பிடத்திற்குக் கீழ் பாறை, பாறை

யாக வெடிமருந்தை அடைத்து வைத்திருப்பதுபோல் இருக்கிறது. அதற்கு திரிவைக்கும் சமயத்தைத்தான் எதிர்பார்க்கப்படுகிறது.

### உள்நாட்டிலும் போலீஸ்காரர்கள்தான்.

வெளிநாட்டில்தான் அவர்கள் கதி இப்படியென்றால் உள்நாட்டிலும் இதைக்காட்டிலும் அவர்களுக்கு நல்ல கதி இல்லை. ஆதியில் நாஸிகளின் கொடிய ஆட்சிக்குப் பலியானவர்கள் ஜெர்மானியர்கள் என்பதை இந்நாட்களில் நாம் மறக்கக்கூடும். இப்பொழுது போலந்துகாரர்களுக்கும் செக்கர்களுக்கும் ஏற்பட்ட துன்பங்கள் ஏற்கனவே ஜெர்மானியர் இதைக் காட்டிலும் அதிகமாக அனுபவித்திருக்கிறார்கள். கைதிகளின் முகாம்கள் பூராவிலும் ஜெர்மானியர் நிரம்பியிருந்தார்கள். ஆயிரக்கணக்கான ஜெர்மானியர் திடீரென்று மறைந்தார்கள். அவர்களை எரித்த சாம்பல் அவர்கள் வீட்டு வாசல்களில் கொண்டு போடப்பட்டன. அவர்கள் பட்ட கஷ்டம் எங்கும் வியாபித்தது. அவர்கள் பெண்சாதி, பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும் ஜெர்மன் ரகசியப் போலீஸாருக்குப் பயந்து மௌனமாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் இந்தக் கொடிய செய்கைகளை மறந்துவிடவில்லை. ஆஸ்திரேலியாவில் இந்த சமயத்திலும் கூட ஒரு பெரிய கலவரம் இருக்கிறது. வீயன்னாவில் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் கைதி செய்யப்படுகின்றனர். ஜெர்மனியில் சந்தேகப்பட்டவர்கள் இன்னும் சுயேச்சைப்படி கொஞ்சமாவது நடக்கக்கூடிய பேர்கள் இவர்களை ஜெர்மன் ரகசியப் போலீஸ் சுற்றி வளைத்துக் கொள்ளுகிறார்கள். பெரிய மனுஷ்யர்களும், சிறிய மனுஷ்யர்களைப்போல் மறந்துவிடக்கூடும். பிரக்யாதி பெற்ற தளகர்த்தர்கள் திடீரென்று சொல்லவொட்டாத நோய்களால் பீடிக்கப்படுவார்கள். அதிகாரிகளும், ஜெர்மன் ரகசியப் போலீஸார் மோட்டார்களில் நுழைவதைப் பார்க்கலாம். பிற்பட்டு அவர்கள் இருப்பதைக் காண முடியாது.

### இன்றைக்கிருப்பார் நாளைக்கு மறைந்து விடுவார்.

இந்த நீண்ட கத்திகள்கொண்ட கலகக்கூட்டம் தோன்றி எட்டு வருஷங்கள் ஆகின்றன. அதன் அக்கிரமங்கள் நடந்துகொண்டே வருகின்றன. அதற்கு வெடிகிற காலம் வரவில்லை. அநேக கொலைகள் செய்த இந்தக் கூட்டம் ஏராளமாகக் கொள்ளைப் பொருள்களை அடைந்திருக்கிறது. அநேக வருஷங்களாக கீழே போய்க்கொண்டேயிருக்கிறது. இப்பொழுது படு வேகமாகப்போகிறது. அதற்கு கீழே பாதாளம்தான். இப்பேர்ப்பட்ட மனுஷ்யர்களே 1,000 வருஷங்கள் நிலைநிற்கக்கூடிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போவதாக பெருமை பேசுகிறார்கள். அவர்கள் இப்படி கூக்குரல் போட்டுக்கொண்டிருந்த போதிலும் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாகியிருப்பதாக நடப்பில் ஒன்றும் தோன்றவில்லை. அவர்கள் சொல்லும் பைத்தியக்கார சாம்ராஜ்யம் 1,000 வாரங்களுக்குக் கூட இருக்குமென்றும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. எதிரிகளிடத்திலும் ஒருவருக்கொருவர் காட்டும் பித்துக் கொண்ட கொடுமையைப் பார்க்க, இன்றைக்கிருப்பது நாளைக்குப் போய்விடும் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் வீட்டை உடைத்துப் புகுந்து போலீஸ்காரர்கள் வருமுன் கொள்ளையடித்துப் போகிறவர்களைப்போல அரசியல் விஷயங்களில் புகுந்திருக்கிறார்கள்.

### கூட்டுக் கொள்ளைக்காரர்கள்.

அவர்கள் சிநேகிதர்களும் ஒருவகைப்பட்டவர்கள். அவர்கள் கூட்டுக் கொள்ளைக்காரர்கள்தான். அடுத்தபடி யாரைக் கொல்லலாம் என்று எதிர்பார்க்கிறவர்கள். அவர்களின் சிநேகத்தின் தன்மை என்ன? அவர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் சிநேகம் முறிந்துவிட்டது. நாஸி ஜாதியாரின் கோட்பாடுகள் எல்லாம் கேவலமானவை என்று ஜப்பானியர்களுக்குத் தோன்றுகிறது. இதாலியர்களும் அவர்களை வெறுக்கிறார்கள். இதே மாதிரியாக ஹங்கேரியர்கள், ருமேனியர்கள், பல்கேரியர்கள் இன்னும் பாக்கியுள்ள முக்கியமான நடுநிலை நாடுகளில் உள்ளவர்களுக்கு அவர்களில் அவநம்பிக்கையும், அருவெறுப்பும் உண்டாகி, அதிகரித்து வருகிறது. பரஸ்பர நம்பிக்கையும் இல்லை; பிரீதியுமில்லை. ஹிம்லருக்காவது, கோயபல்ஸுக்காவது, ரிப்பன்டிராப்புக்காவது அந்த சபை அங்கத்தினர்களில் ஒரு சிநேகிதர்கூட இல்லை. அந்த நீண்ட கத்தியுள்ளவர்கள் செய்

திருக்கும் கொலைகளை நினைத்துப் பார்த்தால் எவ்வளவோ தலைவர்கள் பலியாகியிருப்பது தெரியவரும். இந்தக் கூட்டத்தார்களுக்கு எல்லா அதிகாரம் இருந்தபோதிலும் இமைப்பொழுது கூட அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. சில சமயங்களில் கடவுள் சைத்தானை ஏவிவிட்டு நாஸிக் கக்ஷியை உண்டாக்கச் செய்தார் என்றும், சில சமயம் அக்கக்ஷியை பிரகாசிக்கச் செய்தாரென்றும், சுயநலம் கொண்டிருக்கும் உலகத்தார்களுக்கு இது ஒரு மகத்தான எச்சரிக்கையாக இருக்கட்டுமென்று கடவுள் செய்திருக்கிறார் என்றும் நான் நினைக்கிறேன்.

**மாக்பெத் நாடகத்தின் கடைசி கட்டம்.**

அதிகார விருப்பம் கொண்டவர்களுக்கு இதுதான் சம்பவிக்கும். இரக்கம் காட்டுவதைக் காட்டிலும் கொடுமைதான் நல்லதென்றும், உண்மை சொல்வதைக்காட்டிலும் பொய் சொல்வதுதான் மேலென்றும், எல்லா மனிதர்களும் கோழையான முட்டாள்கள், அல்லது அயோக்கியர்கள் என்றும் தீர்மானித்தால் இவ்விதம் தான் சம்பவிக்கும். வஞ்சகத்திலும், துரோகத்திலும், கொடுமையிலும் உழலவேண்டிவரும். அமுக்குவான் பிசாசு கையில் அகப்பட்டுத் தவிக்க நேரிடும். இதெல்லாம் மாக்பெத் டிராமாவில் கடைசி பாகத்தில் கண்டிருக்கிறது. தன்னைத்தானே நொந்து கொள்ளும் அரசன் எல்லாப் பொருள்களையும் நல்லதற்கு அறிகுறிகள் இல்லையென்றும், எதைப்பார்த்தாலும் இருட்டாகவும் உண்மையில்லைபோல் கண்டதாக கோல்ரிட்ஜ் எடுத்துக்காட்டியிருக்கிறார். உயிர் இருந்தபோதிலும் அது நடை பிணமதான். நடிக்கத் தெரியாதவன் நாடக மேடையில் இங்குமங்கும் சென்று கோபம் அடைகிறான்; பிறகு தலைகாட்டாமல் போய்விடுகிறான். போவதற்கு வேறு இடமில்லை. இங்கு தங்கவும் முடியவில்லை. உயிர் வாழ்வதற்கும் பிடிக்கவில்லை. இம்மாதிரியான நிலைமையிலுள்ள உலகம் இப்பொழுதே அழிந்தால் நல்லது என்று பிரலாபித்துக் கத்துகிறான். அவனிடமும் நீண்ட கத்திகள் கொண்ட வீரர்கள் சேவித்தார்கள். எச்செலவிலும் அதிகாரம் பெற அவனும் விரும்பினான். ஆனால் இதெல்லாம் மனித வாழ்கையில் யாவருக்கும் தெரிந்த புராதனக் கதை. இப்பொழுது நடக்கும் நாடக மேடையோ மிகவும் விசாலமானது. யந்திரங்களும், ஆயுதங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஆகாயத்திலும் அதிக உயரம் பறக்கக்கூடிய விமானங்கள் சப்தமிட்டுச் செல்லுகின்றன. ஆகாய மார்க்கமாக ரேடியோச் செய்திகள் வருகின்றன. இவற்றைத் தவிர மற்ற பண்டை காலத்தில் எப்படி அநேக கொலைகள் செய்த மாக்பெத் கடைசிகாலத்தில் ரொம்பவும் அனுபவித்தானோ, அதாவது மந்திரவாதிகளுடன் சேர்ந்து அதிகாரம் வகிப்பதற்கு இராக் காலங்களில் சதியாலோசனை செய்வது இருட்டில் கொலைகள் செய்வது, இவற்றையெல்லாம் செய்து முடித்து இறுதியில் அதிபாதாளத்தில் விழுந்தானோ அது போல்தான் ஹிட்லரின் கதியும் முடியும்.

---

# யுத்தம் ஆயுதங்களைப் பொருத்திருக்கிறது.

(நார்மன் க்ரம்ப் என்பவரால்).

இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் சரியான ஆயுதங்களும், வெடி மருந்தும் சரியான காலத்தில், சரியான இடத்தில் இருப்பதுதான் வெற்றிக்கு முக்கிய காரணங்களில் ஒன்று. இப்படியில்லாமல்போனால் சென்ற மாதத்தில் லிபியாவில் சம்பவித்ததுபோல தாத்காலிகமாகத் தோல்விகள் ஏற்படலாம். அம்மாதிரித் தோல்விகள அந்த சமயத்தில் பெரிதாகத் தோனறினபோதிலும் சென்ற 2 வருஷ காலமாக லிபியாவில் நடந்த யுத்தத்தில் நமக்கு அடிக்கடி தெரிந்திருக்கிறபடி வெற்றியும். தோல்வியுமாகவேதான் இருக்கின்றன. இத்தகையத் தோல்விகள் நேசதேசத்தார்கள் உறுதிப்பாடு கொள்ளவேண்டிய அவசியத்தையும், பெரும்பாலான நோக்கம் கொள்ளவேண்டிய புத்திசாலித்தனத்தையும் காட்டுகின்றன.

இப்பொழுது கிரேட் பிரிடனில் அம்மாதிரி உறுதிப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு போதுமான அத்தாக்ஷி இருக்கிறது. ரோமல் எகிப்துக்குள் பிரவேசித்துக்

கொண்டிருக்கிறபொழுதே பிரிடிஷ் சுரங்க வேலைக்காரர்களின் சங்கம் கிரீன் கமிட்டி நிர்ணயித்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு, யுத்தத்தை ஜயிக்கத் தேவையான நிலக்கரியை உற்பத்தி செய்யும்படி தேசத்தில் பூராவும் இருக்கும் பிரிடிஷ் நிலக்கரி சுரங்க வேலைக்காரர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஜூன்மீ 28உயில் வெடி மருந்து உற்பத்திசாலைகளிலிருக்கும் வாலிபர்களை எல்லாம் போர்ப்படைகளில் சேருவதற்கு அனுப்பும்படிக்கும், உற்பத்தியில் குறைவில்லாமல் செய்யவேண்டுமென்றும் ஏர்னஸ்ட்பெவின் கட்டளையிட்டிருக்கிறார். வயதுமுதிர்ந்தவர்களைப் பொறுப்புவாய்ந்த வேலைகளுக்கு அமர்த்தியும் இன்னும் அநேக ஸ்திரீகளை ஒழிந்த சமயங்களில் வேலைக்கு அமர்த்தியும் உற்பத்தியில் குறைவுபடாமல் செய்யலாமென்பது அவருடைய நம்பிக்கை. அன்று தினமே என்னை மின்சார இலாகா புது மந்திரி மேஜர் லாயிட் ஜார்ஜ் என்பவர் தொழிற்சாலைகளையும், பொதுமக்களையும், நிலக்கரி, புகை, மின்சாரம் இவைகளை உபயோகிப்பதில் சிக்கனம் செய்யும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறார். லிபியாவில் நடந்த சம்பவம் கிரேட் பிரிடனிலுள்ளவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியிருக்கும். ஆனால் இத்தகைய கோபம்தான் மனவுறுதியையும், முழுப் பிரயத்தனததையும் உண்டாக்கும்.

## வாஷிங்டனில் விசேஷமான தீர்மானங்கள்.

வாஷிங்டனில் ஜனாதிபதி ரூஸ்வெல்டு, மிஸ்டர் சர்ச்சில், M. லிட்வினவ், மிஸ்டர் T. V. ஸூங இவர்கள்கூடி, முக்கியமான புதிய தீர்மானங்களை செய்து கொண்டார்கள். இந்தத் தீர்மானங்களின் தன்மை எப்படியென்பது நாளடைவில் அச்சுநாடுகளுக்குத் தெரியும். ஆனால் அத்தீர்மானங்களெல்லாம் யுத்த தளவாடங்கள் செய்வதைக் குறித்தே இருக்கும். போர்ப்படையிலும், தொழிற்சாலையிலும் உள்ள மனிதபலம், ஆயுத உற்பத்தி, கப்பல்கள் கட்டுவது இவைகளைக் குறித்துத்தான் விவாதம் நடந்திருக்கும். இதே சமயத்தில் பிரிடிஷ் உற்பத்தி இலாகா மந்திரி ஆலிவர் லிடில்டன என்பவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் உற்பத்தி இலாகாத் தலைவர் மிஸ்டர் டொனால்ட் நெல்ஸன் என்பரைச் சந்திக்க நேரிட்டது பெரிய சாதகத்தைக் கொடுக்கும். தானும், மிஸ்டர் நெல்ஸனும் ஆகிய இரண்டே மெம்பர்கள் சேர்ந்து உற்பத்தியும், பொருளாதாரமும் இணைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கிரேட் பிரிடனுக்கு, மிஸ்டர் லிடில்டன் திரும்பி வந்தவுடன் மந்திரி சபைக்குத் தெரியக்கொடுத்தார். ஐக்கிய நாடுகளுக்கு வேண்டிய யுத்தப் பொருள்களைத் தயாரிப்பதை இந்த இருவர்களும் கட்டளையிடவேண்டியது. இதனால் என்ன ஆகும்?

முதலாவதாக இது ஆமோதிக்கவோ, நிராகரிக்கவோ, காலதாமதம் செய்யவோ, புனராலோசனை செய்யவோ, அல்லது இழந்துவிடவோகூடிய அலுவல்களைச் செய்யும் ஒரு பெரிய கமிட்டியில்லை. ஆனால் அதில் பரஸ்பர நம்பிக்கைகொண்ட இரண்டு பேர்கள்தானிருக்கிறார்கள். அடுத்தபடியாக விளைபொருள்களையும், மற்ற இருப்புப் பொருள்களையும் அதிக பயன்தரக்கூடிய விதமாக உபயோகப்படுத்தக்கூடும். அந்த விளைபொருள்கள் எங்கிருந்து வருகின்றன என்பதையும் அவைகளை ஏற்றிச் செல்லுவதற்கு எவ்வளவு கப்பல் இடம் தேவையென்பதையும், அவைகளைத் தயாரிப்பதற்கு எவ்வளவு தொழிற்சாலைகள் தேவை என்பதையும் அவர்கள் நன்கு கவனிப்பார்கள். கிரேட்பிரிடனுக்கு அப்பொருள்களில் அதிகம் கிடைக்கிறதா, யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு அதிகம் கிடைக்கிறதா என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படமாட்டார்கள்.

## உற்பத்தியை நிதானப்படுத்துவது.

இந்த இரண்டு நாடுகளிலும் அவர்களால் உற்பத்தியை நிதானப்படுத்தக் கூடும். பிரிடிஷார் தயாரிக்கப்பட்ட வெடிமருந்து அமெரிக்க பீரங்கிகளுக்குச் சேரக்கூடியதாகவும், முடிவில் இரண்டு சைனியங்களும் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளக்கூடிய ஆயுதங்களை வைத்துக்கொள்ளும்படிக்கும் அவர்கள் செய்வார்கள். சென்ற யுத்தத்தில் நேசதேசப்படைகளில் வேலைசெய்தவர்கள் யாவருக்கும் இதன் முக்கியம் தெரியும். ஆனால் இப்பொழுது இன்னும் 100 மடங்கு

அதிகம் முக்கியமாக இருக்கிறது. அவசியமானால் சில ஆயுதங்களைக் கிரேட் பிரிடனில் தயாரிப்பதையும், சிலவற்றை யுனைடெட் ஸ்டேட்ஸில் தயாரிப்பதையும் ஏற்பாடு செய்யலாம். இவ்வித ஏற்பாட்டில் மனித பலம், யந்திர சக்தி, விளைபொருள்கள், அவற்றை ஏற்றிச்செல்ல தேவையான கப்பல்கள் இவற்றை சிக்கனம் செய்துவிடலாம். இம்மாதிரியாக யுனைடெட் ஸ்டேட்ஸில் பாம்பர்கள் செய்யக்கூடும். ஏனென்றால் அவை அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டிப் பறக்கக்கூடும். கிரேட் பிரிடனில் பைடர்களைத் தயாரிக்கலாம். ஏனென்றால் போர்முனைக்கு அவற்றைக் கொண்டுசெல்லுவதற்கு கப்பல்கள் தயாராக இருக்கும். இருந்தபோதிலும் அமெரிக்க பாம்பர்களுக்கு தனிப்பட்ட உருப்புகளும், பாம்பர்களுக்கு தரையிலிருக்கவேண்டிய முஸ்தீப்புகளும் கிரேட் பிரிடனில் செய்யக்கூடும்.

அமெரிக்க மந்திரி சபையில் டொனல்ட் நெல்ஸன் ஒரு திருப்திகரமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அச்சுநாடுகளில் சேகரித்திருக்கும் யுத்தப் பொருள்கள் அளவுக்கு இப்பொழுது யுனைடெட் ஸ்டேட்ஸில் இல்லாமல் போனாலும் அச்சுநாடுகளைக்காட்டிலும் யுனைடெட் ஸ்டேட்ஸில் அதிகம் தயாரிப்பதாக அவர் சொன்னார். மேலும் "நாம் எவ்வளவு தயாரித்தபோதிலும் அது தற்போதுள்ள தேவைக்குப் போதாது" என்றும் சொன்னார். அவர் சொன்னதையும், மிஸ்ட்டர் லிடில்டன் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் யுனைடெட் ஸ்டேட்ஸில் உற்பத்தியின் சக்திக்கு எல்லையே கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லியிருப்பதையும் சேர்த்துப் பார்க்கவேண்டும்.

இவற்றையெல்லாம் தொழில் முறையில் ஒன்றுசேர்த்துப் பார்த்தால் அச்சுநாடுகளுக்குக் காலம் நாள் கணக்கில்தான் இருக்கிறதென்று சொல்லிவிடலாம். கூடிய சீக்கிரத்தில் நேசநாடுகள் அவர்களுக்குத் தேவையான எல்லா ஆயுதங்களையும் தயாரித்துவிடுவார்கள். சமுத்திரத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு இருந்தபோதிலும் இந்த ஆயுதங்களை ஏற்றிச் செல்லவேண்டியதற்கான கப்பல்களையும் அவற்றை எங்கு தேவையோ அங்கு உபயோகிக்கத்தக்க மனிதர்களையும் சேகரித்துவிடுவார்கள். அச்சுநாடுகளின் முடிவு நாள் வருவதற்குள் அவைகள் என்ன செய்யக்கூடுமென்பதைப் பொருத்திருக்கிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள் அச்சுநாடுகள் சிறிதளவு வெற்றியை அனுபவிக்கலாம். இதனால் தான் ஹிட்லர் இப்பொழுது பெரிய பிரயத்தனத்தைச் செய்கிறான். அவன் பிரயத்தனத்தைச் சமாளித்துவரும் ஒவ்வொரு நாளிலும் அவனுடைய அழிவு சமீபித்துவருகிறது. அச்சுநாடுகளின் முடிவுநாள் வரும்பொழுது நேசநாடுகளின் உற்பத்தி, மனித பலம், கப்பல் போக்குவரத்து இவைகளெல்லாம் எதிரிகளை அழிக்கக்கூடிய ஒரு யந்திரமாகத் தயாரிக்கப்பட்டு, ஹாரி ஹாப்கின்ஸ் சொன்னபடி அச்சுநாடுகளின் யந்திரத்தை முறியடிக்கக்கூடியதாகயிருக்கும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

### பிரஸங்கம் 106—(3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்டு ... | 1, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 6.45 |
| | 2, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு | ... | ,, | 6.30 |
| | 3, திஙகட்கிழமை ... | அன்னவாசல | ... | ,, | 6.00 |
| | | கீழக்குரிச்சி | ... | ,, | 6.30 |
| | 4, செவ்வாய்க்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | ராமச்சந்திரபுரம் | ... | மாலை | 6.00 |
| | | [illegible]வாரம் | ... | ,, | 6.30 |

| 1942— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு ... | 5, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | ராணி பெண்பாடசாலை ... | ,, | 10.15 |
| | | காலேஜ் தமிழ் (பிராஞ்சு ஸ்கூல்) | ,, | 10.15 |
| | | பொ. புதுப்பட்டி ... | மாலை | 6.00 |
| | | வேந்தம்பட்டி ... | ,, | 6.30 |
| | 6, வியாழக்கிழமை ... | மழையூர் ... | ,, | 6 00 |
| | | கரம்பக்குடி ... | ,, | 6.30 |
| | 7, வெள்ளிக்கிழமை... | வாளரமாணிக்கம் ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் ... | ,, | 6.30 |

1194:19(8M)m1N39 N42

## பிரஸங்கம் 107—(4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 8, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6 30 |
| 9, ஞாயிற்றுக்கிழமை. | கீரனூர் ... | ,, | 6.00 |
| | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| 10, திங்கட்கிழமை ... | காரையூர் ... | ,, | 6.00 |
| | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| 11, செவ்வாய்க்கிழமை | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| 12, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | காலேஜ் தமிழ் பிராஞ்சு ஸ்கூல். | ,, | 10.15 |
| | நார்த்தாமலை ... | மாலை | 6.00 |
| | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |
| 14, வெள்ளிக்கிழமை... | கொன்னையூர் ... | ,, | 6.00 |
| | மேலவேகுபட்டி ... | ,, | 6.30 |

69406

---

புதுக்கோட்டை யுத்த முன்னணி பிரசார கோஷ்டியார்கள் பிற்பகலில் கீழ்கண்ட இடங்களுக்கு வருவார்கள். பாண்டு வாசித்துக்கொண்டு, படங்கள் காண்பித்து, துண்டு பத்திரிகைகள் கொடுத்து, பிரசாரம் செய்வார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | ... | 1— 8—42 | ... | பொன்னமராவதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 2— 8—42 | ... | மருதன்கோன்விடுதி. |
| திங்கட்கிழமை | ... | 3— 8—42 | ... | விராலிமலை. |
| செவ்வாய்க்கிழமை | ... | 4— 8—42 | ... | வடகாடு. |
| வியாழக்கிழமை | ... | 6— 8—42 | ... | கீழாநிலை. |
| வெள்ளிக்கிழமை | ... | 7— 8—42 | ... | புதுக்கோட்டை. |
| சனிக்கிழமை | ... | 8— 8—42 | ... | வெட்டம்விடுதி. |
| ஞாயிற்றுக்கிழமை | ... | 9— 8—42 | ... | விராச்சிலை. |
| திங்கட்கிழமை | ... | 10— 8—42 | ... | கொன்னையூர். |
| செவ்வாய்க்கிழமை | ... | 11— 8—42 | ... | பெரம்பூர். |
| புதன்கிழமை | ... | 12— 8—42 | ... | கீழாநிலை புதுப்பட்டி. |
| வெள்ளிக்கிழமை | ... | 14— 8—42 | ... | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—1-8-42.